REGD. M 4642.

# திராவிடநாடு

விலை அணா 2　ஆண்டுசந்தா ரூ 7　இலங்கை 15 சதம்　மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 13—2—49 | இதழ் 33

# பிரசாரம் வீண்போகவில்லை.

கடவுள் பேராலும், மதத்தின் பேராலும் நடைபெற்று வரும் ஊழல்களை விளக்கியும், அவை ஒழிக்கப்பட வேண்டுமென்பதை வற்புறுத்தியும், அப்போது தான் நாம செம்மை நெறியில் நின்று வாழ முடியும் என்பதைத் தெளிவு படுத்தியும் நாம் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாகவே பிரசாரம் செய்து வருகிறோம். நம்முடைய இந்தப் பிரசாரத்தைத் தவறாகப் பொருள்படுத்தி, நாம் தப்பான வழியில் செல்கிறோம் என்றும், நன்மைக்குப் பதில் தீமையே உண்டாக்கப்படுகிறதென்றும், கடவுளை நிந்திக்கும் 'கயவர்கள்' என்றும், மதத்தை மங்க வைக்கும் மாபாதகம் செய்யப்படுகிறதென்றும், எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் பார்ப்பனரைப் பகைத்து, அவர்களை நம்முடைய எதிரிகளாகக் கொள்வதற்கே இந்தப் பிரசாரம் நடைபெறுகிறதென்றும், இன்னும் பல குற்றச்சாட்டுகள் நம்மீது சுமத்தப்பட்டன. இவை மட்டுமல்ல, 'இவர்கள் நாத்திகக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள்—விதண்டா வாதிகள்-வீண் வம்புக்கு நிற்பவர்கள்' என்றெல்லாம் பழிக்கப்பட்டோம். இன்னும் இந்தப் பழி சுமத்து படலம் முடிவுபெறவில்லை, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

இதற்குக் காரணம், உண்மைக்கும் உலகுக்கும் உள்ள — இருக்க வேண்டிய இன்றியமையாத தொடர்பை, இன்றைய 'நமது' மதக்கோட்பாடுகளும், கடவுள் தன்மையையும் சிதைத்துவிட்டதே யாகும். கடவுளைப் பற்றியும், மதத்தைப் பற்றியும் நமக்குப் போதித்தவர்கள், உண்மையை மறைப்பதன் வாயிலாகத் தங்களுடைய போதனைகள் நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவான நலம் பயக்கக் கூடியனவாக இருத்தல் வேண்டுமென்ற பரந்த நோக்கத்தைக் கொள்ளவில்லை. மதம் என்றால்,—கடவுள் என்றால், மக்கள்மனதில ஒரு தவிர்க்க முடியாத அச்ச உணர்ச்சி ஏற்பட்டதே யன்றி, அன்புநிலை ஏற்படவில்லை — ஏற்படுத்தவில்லை. இவர்களால் ஊட்டப்பட்ட இந்த அச்சம் நிலைபெறுவதற்கு மக்களிடம் அறியாமையும், ஆராயாமையும் அவசியம் அமைதல் வேண்டுமென்பதில் மதபோதகர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்தனர். மதத்தைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் மக்கள் கருத்து வேறுபாடு கொள்வதோ, அவைபற்றி ஆராய்வதோ கூடாது-'பாவம்' என்று ஆண்டவன் பேரால் ஆணையிட்டு, ஆகமங்களையும் பிற மதநூல்களையும் எழுதிவைத்துவிட்டனர். அதோடு, "கடவுளின் பிரதிநிதிகள் இவர்கள் தான்—இவர்கள் சொற்படி நடப்பதே முறை" என்பதாகவும் கூறி அதற்கென ஒரு கூட்டத்தாரைத் தனியாக ஒதுக்கி—உயர்ந்த நிலையில் வைத்தும் விட்டனர். அவர்களுக்கும் நமக்கும் இயல்பாக இருக்கவேண்டிய அண்ணன் தம்பி போன்ற முறைமாறி—அன்புடன் அளவளாவும் பண்பு மாறி-அச்சத்தின் அடிப்படையில் எழுப்பப்பட்ட அடிமை உணர்ச்சி மேலிட்டு — அவர்களைக் கண்டவுடனே மேலாடையை இடுப்பில் சேர்த்துக், கைகட்டி, வாய்பொத்தி, அவர்களை 'ஸ்வாமி' என்றழைக்கவும், அவர்கள் தங்கள் வலதுகையில் 'நெருப்பு' இருப்பதாகவும், இடது கையைச் சிறிது தூக்கி நம்மை ஆசீர்வதிக்கவும், நாம், நம்மை 'அடியேன்' 'தாசன்' என்ற சொற்களால் இறக்கி, அவர்களுடைய பாதாரவிந்தங்களில் விழுந்து வணங்கவுமான ஏற்பாட்டையும், நம்முடைய உழைப்பின் பெரும்பகுதி அவர்களுடைய வாழ்க்கையை வளம் படுத்துவதற்கே பயன் படுத்தப்படவேண்டுமென்ற கோட்பாட்டையும் கடவுளின் பேரால் செய்து வைத்துவிட்டனர். கடவுளின் பெயர் கூறி எழுதப்பட்ட மதநூல்கள் எதிலாவது நாம் மேலே எடுத்துக் காட்டிய உண்மைகள் இல்லையென்று எவராவது கூற முடியுமா?

இந்த நிலையில், இன்னொரு கூட்டம், தாங்களும் கடவுளின் பிரதிநிதிகள் என்றும், மத பாதுகாப்பாளர்கள் என்றும் கூறிக் கொண்டு கிளம்பிற்று. இந்தக் கூட்டம் நமது சேர—சோழ—பாண்டியர்களால் உண்டாக்கப்பட்டதாகும். என்றாலும், இவர்கள், தாங்கள் சேர — சோழ — பாண்டியர்களால் உண்டாக்கப்பட்டவர்கள் என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படுவதோடு, தாங்கள் நேரே திருக்கயிலாயத்தில் இருந்து வந்ததாகவும், தங்களுடைய பரம்பரை திருக்கயிலாய பரம்பரையே மொழிய, மக்கட்

பரம்பரையைச் சார்ந்ததல்லவென்றும் கூறிக்கொள்வதில் ஒரு தனி மகிழ்ச்சியும் பெருமையும் கொண்டவர்கள். யார் இவர்கள்?

"கோயில்களில் உள்ள சாமிகளைப் பட்டினி போட்டுத் தங்கள் சொகுசான வாழ்க்கைக்குக் கோயிற் சொத்துக்களைப் பகிரங்கமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ள பண்டார சந்நிதிகள்"

என்று டாக்டர் இராசன் அவர்கள் குறிப்பிடும் நமது தமிழ் நாட்டு மடாதிபதிகள்தான் இவர்கள். சந்தேகமா உங்களுக்கு? இதோ இன்னொரு உதாரணம்!

"இந்த ஸ்தாபனங்கள், உலக சுகங்களில் ஆசையில்லாத, கல்வியிலும் அறிவிலும் பெரியவர்களாய் இருந்த துறவிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தத் துறவிகளின் மேற்பார்வையில் சிலகாலம் காரியங்கள் செவ்வனே நடந்துவந்தன........இப்படியாக நடந்தேறிவந்த இப்பணி, நாளடைவில் இந்த ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்ட நோக்கங்களுக்கு நேர்மாறான விளைவுகளுக்கு இலக்காகிவிட்டது. இந்த ஸ்தாபனங்களின் தர்மகர்த்தாக்கள் மக்களின் நலனைச் சிறிது சிறிதாக மறந்து, தங்கள் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும், ஆசாபாசங்களுக்கு அடிமைகளாகிப், பொதுப் பணத்தால் தங்கள் சுகம் பேணி, ஒழுக்கங் கெட்ட முறையில் நடக்கத் தொடங்கினார்கள்."

என்று 'நமது மடாதிபதிகளை'ப் பற்றி நமது முதலமைச்சர் தோழர் ஓ. பி. இராமசாமி அவர்கள் 6—2—49ல் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் பேசும்போது குறிப்பிட்டார். இந்த மடாதிபதிகள் பொறுப்பில் ஏராளமான பொதுநலச் சொத்துக்கள் உள்ளன. இந்தச் சொத்துக்கள் எதற்காக உள்ளனவோ, அதற்கு அவை பயன்படவில்லை யென்றும், பண்டாரச் சந்நிதிகள் தங்களுடைய சொந்தச் சுகபோக வாழ்வுக்கே அந்தச் சொத்துக்களைப் பயன்படுத்துகின்றனர் என்றும், எனவே, அவற்றைச் சர்க்கார் பொறுப்பெடுத்து ஒழுங்காக நடத்தவேண்டுமென்றும், சர்க்கார் இப்போது ஓர் மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தத் தீர்மானம் வெற்றி பெற்றுச் சட்டமாக்கப்பட வேண்டுமென்பது பெரும்பான்மை சட்டசபை உறுப்பினர்களுடையவும் பொதுமக்களுடையவும் விருப்பமாகும். ஆனால், இதற்கு நாம் மேலே குறிப்பிட்டுள்ள, 'கடவுளின் பிரதிநிதிகள்' மட்டும் எதிர்ப்பாக இருக்கிறார்கள்; இவர்களோடு, இவர்களுடைய தயவு அன்றி வேறு நல்ல முறையில் தங்கள் வாழ்க்கையை நடத்தமுடியாத சிலரும் சேர்ந்துகொண்டு இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறார்கள். இதற்காக ஒரு சாமியார்—முன்னாள் கே. வி. கணபதி அய்யர் — அங்கச்சியம்மாள் என்ற பார்ப்பனரல்லாத வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் தமது ஆசைநாயகியாக வைத்திருந்தவர்— ஒரு சமயம் அப்பெண் பெற்றோர்களால் அழைத்துச் செல்லப்பட்டதற்காகக் காவிரியாற்றில் விழுந்து தற்கொலைசெய்துகொள்ள முயன்று, கதர்த் தோழர்களால் காப்பாற்றப்பட்டவர்—பின்னர் அப்பெண்ணைத் தாமே துரத்திவிட்டுத் துறவியானவர்—இந்நாள் ஸ்ரீ ஸ்ரீ சத்யானந்த சரஸ்வதி-ஸ்வாமிஜி என்று அழைக்கப்படுபவர் — இந்தப் பண்டாரச் சந்நிதிகளின் சரச சல்லாப வாழ்க்கை பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக உண்ணாநோன்பிருக்கிறாராம்.

"நான் பெற்ற பேறு பெறுக இவ்வையமெல்லாம்"

என்ற முதுமொழிப்படி இந்தச் சாமியார் அங்கச்சியம்மாளிடம் பெற்ற இன்பத்தைத் தம்முடைய சகாக்களான பண்டாரச் சந்நிதிகளும் சதா சர்வ காலமும் பெற்றுக் கொண்டிருக்கட்டும் என்ற பெருங்கருணையோடு உண்ணாநோன்பிருக்கிறார் போலும்! இந்தப் பண்டாரச் சந்நிதிகளின் கோலாகல வாழ்வையும், இவர்கள் நாட்டுக்குச் செய்யும் நயவஞ்சகத்தையும் விளக்கி பிரபோத சந்ரோதயப் பாடல்கள் என்ற தலைப்பில் பல பாடல்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக ஒன்றை மட்டும் இங்கு வெளியிடுகிறோம்:—

"இரவெலாம் காமக்
கணிகையர் முயக்கில் இன்ப
முற்று இயற்பகலெலாம்,

தூரவராய் அணிவெண்
ணீற்று உருத்திராக்கக்
கோலமார்ச்சாலமாம்
குழையும்,

பரவு பாவனையும் தேவதா
அர்ச்சனை தாம்பண்ணல் போல்
உருப் பல பரப்பி,

விரவு மாமணி தொட்டு
ஆட்டலும் பார்க்கின் மிகக்
கொடிதிவர் வஞ்ச வேடம்"

என்ற பாடல், இன்றைய பண்டாரச் சந்நிதிகளின்—திருக் கயிலாய பரம்பரையினரின் பகல் வேடத்தைப் பளிங்கென எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இப்படிப்பட்டவர்களின் இன்ப வாழ்க்கைக்கு இடையூறு நேரிடாதபடி பாதுகாத்துக் கொள்வதையே முன்னாள் கே. வி. கணபதி அய்யர் தம்முடைய கடமையாகக் கொண்டு உண்ணாநோன்பிருக்கிறார். இவருடைய இந்த உண்ணாநோன்பைப்பற்றிக் குறிப்பிடும்போது நமது முதலமைச்சர்,

"இந்த நல்லகாரியத்துக்கு எதிராக ஒருவர் உண்ணாவிரதம் கூட இருக்கிறார்........சத்தியத்திற்காகவும், பெரிய இலட்சியங்களுக்காகவும், மக்களின் நன்மைக்காகவும் செய்யவேண்டிய காரியங்களை இப்படியா உபயோகிப்பது?

என்று கேட்கிறார். சத்தியம், இலட்சியம், நன்மை எதுவும் இந்தச் சாமியாரின் உண்ணாநோன்பில் இல்லையென்றும்,

"பொதுப் பணத்தால், தங்கள் சுகம் பேணி, ஒழுக்கங் கெட்ட முறையில் நடப்பதற்கே"

இவ்வுண்ணாநோன்பு பயன்படுமென்றும் முதலமைச்சர் கூறுகிறார். கூறுவதோடு மட்டும் அவர் நிற்கவில்லை.

"ஏதாவதுசீர்திருத்தம் செய்ய நினைத்தோமானால், மதத்துக்கும் கடவுளுக்கும் துரோகி என்று என்னை நிந்திக்க முற்பட்டு விடுகிறார்கள்"

என்று வேதனைப்படுகிறார். நமது முதலமைச்சர் மத விரோதியா? கடவுள் இல்லை என்னும் நாத்திகரா? இல்லவே இல்லை. அவர் ஒரு பழுத்த வைதிகர், கடவுள்—மதம் ஆகியவை காப்பாற்றப்படவேண்டுமென்பதில் அவருக்கிருக்கும் பிடிவாதமும், நம்பிக்கையும் வேறெவருக்கும் இல்லையென்று கூடச் சொல்லலாம். மந்திரிப்பதவியில் இருந்து கவனிக்க வேண்டிய வேலைகளைப் பார்க்கிலும், மவுன விரதம் இருந்து மதத்தைக் காப்பாற்றுவதையே மிகமிக முக்கிய

மான பணியாகக் கொண்டவர்-அப்படிப்பட்டவரே மதத்தின் பேரால் ஊழல்களும், ஒழுக்கக் கேடுகளும் நடைபெறுகின்றன என்றும், அவற்றைச் சீர்திருத்த வேண்டுமென்றும் கூறுகிறார் என்றால், உண்மையாகவே மதவிரோதிகள் என்று சிலரால் கருதப்படுபவர்கள் மதத்தைச் சீர்படுத்துவது முடியாத காரியமென்றும், காலநிலைக்கும் இயற்கைப் பண்பாட்டிற்கும் ஏற்ப மதத்தை—மக்களுக்கு—அவர்களின் நல்வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய முறையில் மாற்றியமைக்கவேண்டுமென்றும் கூறுவதில் ஏதாவது குற்றம் இருக்கிறதென்று எந்த யோக்கியராவது கூற முடியுமா?

மதத்தைக் கண்டிப்பவர்கள்—கடவுளை நிந்திப்பவர்கள் என்ற பட்டியில் சேர்த்து, நம்மை நாத்திகர்கள் என்று கருதுபவர்கள், நம்முடைய உண்மையான-மறுக்கமுடியாத நோக்கம் எது என்பதையே அறிய முடியாத அறிவுச் சூன்யர்கள் என்று நாம் அவர்கள்பால் பொறுமையோ பகைமையோ கொள்ளாமல், நம்முடைய பணியை நானிலம் ஏற்றுக் கொள்ளும் வரை தளராது—சலியாது செய்து வருவதென்ற முடிவோடு செய்து வருகிறோம். நம்முடைய பணி பழுதற்றது பகைமை உணர்ச்சியோடு செய்யப்படுவதல்ல-பார்ப்பன துவேஷத்தால் கிளம்பியதல்ல—கடவுளிடம் நம்பிக்கை இல்லாததால் உண்டானதல்ல — விதண்டாவாதமல்ல — வீண்வம்புமல்ல என்பன போன்றவைகளை இப்போது உணரவும், அந்த உணர்ச்சிமேலிட்டால் தங்களுடைய கருத்துக்களைக் கள்ளங் கவடின்றி வெளிப்படையாகவே கூறவும் முன்வந்திருப்பது கண்டு களிக்கிறோம்.

> "விக்கிரக வழிபாடும் கோயில்களும் இந்து மதத்தின் அத்யாவசியமான அம்சங்களா என்பது பற்றியே படித்த வகுப்பினரிடையே புது மனப்பான்மை இருந்துவருகிறது"

என்று 'தினமணி' தனது தலையங்கத்தில் 5-2-49-ல் எழுதியிருக்கிறது.

மதத்தின் பேரால் கோயில்களும், அந்தக் கோயில்களில் விக்கிரகங்களை வைத்து வழிபடுவதும், அதற்காகக் கோடிக்கணக்கான பொருளைக் குவித்து வைத்திருப்பதும் முறைதானா என்று கேட்பதையே நாம் மத கண்டனம் செய்வதாகவும், கடவுள் நிந்தனை புரிவதாகவும் பலர் கருதினார்கள் — நம்மைக் கண்டித்தார்கள். ஆனால் இப்போது படித்த வகுப்பினரே கோயில்களும் விக்கிரக வழிபாடும் அவசியமா என்று நினைக்கும் அளவுக்கு வந்துவிட்டார்கள் என்று 'தினமணி'யே எழுதுகிறதென்றால், நம்முடைய பிரசாரம் தவறான வழியில் செய்யப்படுகிறதென்றோ, அல்லது எந்த விதமான பகைமை—பொறாமை—குரோதம் கொண்டோ செய்யப்படுகிறதென்றோ யாராவது படித்தவர்கள் — அறிவாளிகள் கூற முடியுமா? கோயிலும் விக்கிரக வழிபாடும் இல்லாமலேயே மக்கள் வாழ முடியும் என்று நாம் கூறினோம். அப்போதெல்லாம் நாம் நாத்திகர் என்று அழைக்கப் பட்டோம், ஆனால் இப்போது,

> "இந்து மதத்தில் பூரண நம்பிக்கையுள்ள ஒருவன், விக்கிரக ஆராதனையில்லாதவனாக இருக்க முடியும்"

என்று 'தினமணி' நம்மைவிட ஒருபடி மேலேயே சென்று எழுதி இருக்கிறது. விக்கிரக ஆராதனைதான் வீணான பொருள் அழிவுக்கெல்லாம் காரணமாக இருக்கிறது. ஆகையால், விக்கிரக வழிபாடும், அதுசெய்வதற்கு ஒரு இடமும் (கோயிலும்) அதற்காக அளவற்ற பொன்னும் பொருளும் செலவு செய்யப்படாத ஒரு மதம், அது, எந்தப் பெயரோடு இருந்தாலும் அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை என்பதே நம்முடைய பிரசாரத்தின் சுருக்கமாகும். விளக்கத்திற்காகப் பல உதாரணங்களை எடுத்துக் காட்டியிருப்போம். அவை விதண்டா வாதமாகப் பலருக்குத் தோன்றியிருக்கலாம். பாலில்லாத காரணத்தால் தங்கள் பச்சிளங் குழந்தைகளைக் காப்பாற்ற முடியாமல் பதைக்கும் மக்களை இலட்சக் கணக்காக உள்ள ஒரு நாட்டில், பரமன் பேரைச் சொல்லிக்கொண்டு, கல்லிலும், செம்பிலும், கட்டையிலும், குடக் கணக்கில் பாலைக்கொட்டிக் கொண்டாடுவது முறையா என்று கேட்டிருப்போம். கட்டத் துணியே இல்லாத நாட்டில், பட்டுப் பீதாம்பரங்களைப் பல ரகங்களில் வைத்துக் கொண்டு வேளைக்கொன்றாகப் பரமனுக்கு அணிந்து மகிழ்வது அறமா என்று கேட்டிருப்போம். அரை வயிற்றுக் கஞ்சிக்கே அலைந்து திரியும் ஒரு நாட்டில் பரமனுக்குச் சர்க்கரைப் பொங்கலும் அக்கார அடிசிலும் அவசியமா என்று கேட்டிருப்போம். கொள்ளையடிப்பது போன்று கோடிக்கணக்கான பொருளைக் குவித்து வைத்திருப்பவர்கள், தங்கள் கள்ளச் சிந்தையை மறைக்க வெள்ளித்தேரும் தங்கப் பல்லக்கும் செய்து சாமிக்குத் தருவது முறையா என்று கண்டித்திருப்போம். இவையும் இவை போன்ற இன்னும் பல தேவையும் அவசியமும் அற்ற செயல்கள் கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் நடைபெறுவது முறையா என்று கேட்டிருப்போம். ஆனால் இன்று,

> "இளநீரைக் குழந்தைகளுக்குக் கொடுக்காமல், சாமி தலையில் ஊற்றி வீணாக்குவதா என்று நினைப்பவரும் கோயில் மேற்பார்வையாளராக வந்து விட முடியும்"

என்று 'தினமணி' மேலும் எழுதுகிறது. காலம் மாறி வருவதையும், அதற்கேற்பக் கருத்துக்களும் மாறுபடும் என்பதையும் நன்குணர்ந்தே தான் 'தினமணி' இவ்விதம் எழுதுகிறது. விளையாட்டுக்காகவோ அல்லது வேண்டுமென்று கிண்டல் செய்வதற்காகவோ இவ்விதம் எழுதப்படுகிறது என்று எவரும் நினைத்துவிட முடியாது. அடிப்படையிலேயே அசைவு கொடுத்துவிட்டதென்பதன் படப்பிடிப்புத்தான் இவை என்பதை நாம் நன்கறிவோம்.

> "மந்திரிப் பதவியில் வருபவர்கள் கூட எல்லாரும் ஸ்ரீ ரெட்டியாரைப் போலவோ, டாக்டர் ராசனைப் போலவோ விக்ரக ஆராதனையில் நம்பிக்கையுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது நிச்சயமில்லை"

என்றெழுதுவதன் வாயிலாக, எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை எடுத்துக்காட்டுகிறது 'தினமணி'. இனி வரப்போகும் காலம், விக்கிரக வழிபாட்டையோ, அதற்காக வீண் செலவு செய்யப்படுவதையோ ஒப்புக் கொள்ளாது-விரும்பாது என்பதைத் 'தினமணி' உணருகிறது. இந்த உணர்ச்சி 'தினமணி'க்கு மட்டும் ஏற்பட்டதென்று நினைத்துவிட வேண்டாம், கோயில்கள்—மடங்கள்—அக்ரகாரங்கள்-அரண்மனைகள்—ஆசிரமங்கள் ஆகியபல்வேறு முகாம்களிலும் இந்த உணர்ச்சி ஏற்பட்டு

விட்டதென்பதுதான் இதன் முழு உண்மையாகும். ஒரு பத்திரிகையின் தலையங்கம் என்றால், அது, அந்தப் பத்திரிகையை நடத்துபவரின் சொந்தக் கருத்து மட்டுமல்ல—நாட்டிலுள்ள பலரின் கருத்தே ஒரு பத்திரிகையின் தலையங்கமாக உருவெடுப்பதாகும். எனவேதான், நாட்டின் எதிர்காலம், மதம், கடவுள், விக்ரக வழிபாடு ஆகியவைபற்றி இதுவரை இருந்து வந்ததுபோல் இருக்காதென்றும், இவற்றில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படப் போவதை இனி யாரும் எந்தக்காரணத்தைக் கொண்டும் தடுத்துவிட முடியாதென்றும் கூறுகின்றோம். நாம் பலகாலமாகவே கூறிவந்த பிரச்னைகளில் முக்கியமான ஒன்று, இப்போது, நம்முடைய திட்டங்களை எதிர்த்து வந்தவர்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டு, அது சட்டமாக்கப்படும் நிலை ஏற்பட்டது கண்டு மகிழ்கிறோம்.

நாம் எதெதை நாட்டுக்குத் தீங்கு பயக்கும் காரியங்கள் என்று கூறிவந்தோமோ, அவையெல்லாம் ஒவ்வொன்றாக இப்போது, சரியானது-நியாயமானது—உடனடியாகக் களையப்படவேண்டிய தீங்குதான் என்ற அளவுக்கு எதிர்முகாமிலிருந்தே அபிப்பிராயங்கள் எழத்தான் போகின்றன என்ற நம்பிக்கை நமக்கிருந்துவந்த போதிலும், இவ்வளவு விரைவாகவும், சம்பந்தப்பட்ட பிரச்னைகளைப்பற்றிக் காரசாரமாகவும் பேசப்படும் என்று நாம் எதிர்பார்க்கவே இல்லை. ஏதாவதொன்றில் சீர்திருத்தம் செய்யவேண்டும் அல்லது மாற்றியமைக்கப்படவேண்டுமென்று நாம் சொன்னபோதெல்லாம், நம்மீது சீறிவிழுந்த அன்பர்கள் பலர், இப்போது, தவறான ஏற்பாடுகளை எல்லாம் திருத்தியமைக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். இந்துமத அறப்பாது காப்புச் சொத்துக்கள் எல்லாம் சர்க்கார் நிர்வாகத்தில் வரவேண்டுமென்று கொண்டு வரப்பட்டிருக்கும் தீர்மானத்தை ஆதரித்துப்பேசிய தோழர் ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள்,

> “இந்தச் சீர்திருத்தத்தை ஆட்சேபிப்பது பதினேழாம் நூற்றாண்டுப் பேச்சாகத்தானிருக்கும்”

என்று 7—2—49-ல் சட்டசபையில் பேசியிருக்கிறார். சீர்திருத்தம் என்ற சொல்லைக் கேட்டாலே, அது, நாட்டுக்கு நாசத்தை உண்டாக்கும் ‘நயவஞ்சகர்களின்’ கூச்சல் என்று கூறியவர்களே, இன்று, சீர்திருத்தத்திற்கு எதிராகப் பேசுபவர்களைப் பார்த்து ஏளனம் செய்து “இவர்கள் எல்லாம் பதினேழாம் நூற்றாண்டில் வாழவேண்டிய அப்பிராணிகள்” என்று கேலிசெய்யும் அளவுக்குக், சீர்திருத்தம் செய்ய வேண்டியதன் இன்றியமையாமை இன்று நாட்டில் வேரூன்றி விட்டது. இதுமட்டுமல்ல, மதத்திற்கும் கடவுளுக்கும் தர்மம் செய்பவர்கள் எல்லாம், நாட்டுநிலையை உணராதவர்கள் என்றும், தாங்கள் செய்யும் கொடுமைகளை மறைக்கவே இப்படிப்பட்ட தர்மங்களைச் செய்கிறார்கள் என்றும் நாம் கூறியபோதெல்லாம், நாம் நாத்திகப் பட்டியில் சேர்த்துப் பேசப்பட்டோம். ஆனால், இன்று, “இதுபற்றி நீங்கள் கூறியது போதாது; இன்னும் கடுமையாகவும் விளக்கமாகவும் கூற வேண்டு” மென்பது பலரால் உணரவும், ஒப்புக்கொள்ளவுமான நிலை ஏற்பட்டுவிட்டது.

> “தற்காலத்தில் வேறு செயல்களால் மக்களின் மதிப்பைப் பெற முடியாதவர்களும், தாங்கள் செய்யும் மற்றப் பாப காரியங்களை மறைப்பதற்கும், மற்றும் விளம்பரத்திற்காகவுமே தர்மம் செய்கிறார்கள்.”

என்று நமது மாகாண முதலமைச்சரே கூறுகிறார். கோயிலுக்கும், மதத்துக்கும், கடவுளுக்கும் தர்மம் செய்பவர்கள் யார்? எப்படிப்பட்டவர்கள்?

1. வேறு வகையில் மதிப்பைப் பெற முடியாதவர்கள்!
2. தாங்கள் செய்யும் பாப காரியங்களை மறைப்பவர்கள்!
3. விளம்பரப் பிரியர்கள்!

இப்படிப்பட்டவர்கள்தான் இன்று தர்மம் செய்பவர்களாக உள்ளனர் என்று முதலமைச்சர் தைரியமாகவும், வெட்டவெளிச்சமாகவும் கூறுகிறார் என்றால், அதில் உண்மையில்லையென்றோ, அல்லது அவர் நாத்திகராய்விட்டார் என்றோ, அல்லது பெரியார் இராமசாமியின் கொள்கைகளையும் திட்டங்களையும் மறைமுகமாக ஆதரிக்கிறார் என்றோ எவராவது கூறமுடியுமா? நாட்டில் இப்போது மதத்தின் பேரால் நடைபெறும் கொடுமைகளும் அக்ரமங்களும் சகிக்க முடியாத அளவுக்கு வளர்ந்துவிட்டன என்பதைத்தானே முதலமைச்சரின் இந்தப் பேச்சு படம் பிடித்துக் காட்டுகின்றது.

இனி, எதெது தவறானவையோ அவையெல்லாம் சீர்திருத்தியும் மாற்றியும் அமைக்கப்பட வேண்டுமென்று கூறிவரும் நம்மை ‘வகுப்புவாதிகள்’ என்று பலர் வாய் கூசாது கூறிவந்தனர். ஆனால், இப்போது உண்மையான வகுப்புவாதிகள் யார் என்பது இந்தத் தீர்மானத்தின் மூலம் வெளிப்பட்டு விட்டது.

> “இந்த மசோதாவை எதிர்ப்பவர்கள் இப்போது வகுப்புவாதத்தை உண்டுபண்ணுகிறார்கள் என்று நான் எச்சரிக்கை செய்கிறேன்.”

என்று தோழர் சுவாமிநாதன் அவர்கள் சட்டசபையில் பேசியிருக்கிறார். சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கூறுபவர்களல்ல, சீர்திருத்தம் செய்யப்படுவதை எதிர்ப்பவர்களே உண்மையான வகுப்புவாதிகள் என்பதைத் தோழர் சுவாமிநாதன் அவர்கள் தெளிவாக விளக்கிவிட்டார். இனியாவது, சமுதாய சீர்திருத்தப் பணியையே குறிக்கோளாகக் கொண்டு அதற்காகவே அல்லும் பகலும் பாடுபடும் நம்மைப்பார்த்து, ‘இவர்கள் வகுப்புவாதிகள்’ என்று வரட்டுக் கூச்சல் போட்டு, உண்மையான உழைப்புக்கு ஊறு தேடாமல் இருப்பார்கள் என்று நம்புகிறோம்.

எனவே, சட்டசபை உறுப்பினர் தோழர் ஏ. சுப்பிரமணியம் அவர்கள் கூறுவதுபோல்

> “மதத்தின் பேரால் நடக்கும் அட்டூழியங்களை எதிர்க்க வேண்டியது எல்லோருடைய பொறுப்பாகும்”

என்பதற் கேற்ப, இத்தீர்மானத்தை எதிர்ப்பவர்களின் சுயநலச் சுரண்டலுக்கு இடமளியாமல் இத் தீர்மானம் சட்ட பூர்வமாக நிறைவேற்றப்படுமென்றும், இதனால் மதத்தின் பேரால் மடாதிபதிகளும் பிறரும் செய்து வரும் ஆபாசங்களும், அறிவுக்குப் புறம்பான அட்டூழியங்களும் ஒழிக்கப்படுமென்றும் நம்புகிறோம்.

# திராவிட நாடு

ஞாயிறு] 13—2—49 [காஞ்சி


## தர்மசங்கடம்!

✻

நாஸ்திகன்! நெற்றியிலே நீறு இருந்தால் மட்டும் போதுமா? நெஞ்சிலே வஞ்சகம் இருக்கிறது! மடாலயங்களை ஒழிக்க அல்ல, அவைகளிலே உள்ள மாசு துடைக்கவே, மசோதா கொண்டு வருகிறாராம்! இவர், யார், பூர்வ பெருமை வாய்ந்தவைகளும், நமது மத பாதுகாப்புக்கு ஜீவனாகவும் உள்ள, மடாலயங்களைப் பற்றிக் குறை கூற! எவ்வளவு துணிவு இருக்கவேண்டும் இவ்விதம் பேச! இந்த இலட்சணத்தில், விரதமாம், பூஜையாம், ரமணரிஷியிடம் பக்தியாம! வெறும் பசப்பு! இந்து மதத்தை நாசமாக்கும் மசோதாவைக் கொண்டு வருகிறார், தன்னை இந்து என்றும், பக்திமான் என்றும் கூறிக்கொள்கிறார். சுயமரியாதைக்காரன் இதையேதானே கூறுகிறான்—மடம், கோயில், ஆகியஇடங்களிலே, தர்மம் தலைகாட்டுவதில்லை, வீணுக்கு அவைகள் உள்ளன, என்று பேசுகிறான். அவனைக் கண்டிக்கிறோம்—இந்த ஆசாமியும் சேர்ந்து கண்டிக்கிறார்—பெரிய ஆஸ்திகர்போல! இப்போது, இவரே பேசுகிறார்—பேசுகிறாரா!—ஏசுகிறார், மடாலயங்கள் பாபிகளின் பதுங்குமிடங்களாகிவிட்டன என்று. இந்த அழகுக்கு, இவர் தம்மை, பழைமையில் பற்றுக் கொண்டவர், பக்தசிகாமணி என்றும் கூறிக்கொள்கிறார். பக்தர்கள், காணிக்கை தருவர், மானியம் விடுவர், மடாலயங்களுக்கு — இந்தப் பக்தரோ, அந்த நாட்களிலே, வைதீகப் பற்றுள்ள ராஜாதி ராஜாக்கள், மடாலயங்களுக்கு அளித்த மானியங்களைப் பறிக்கப் பார்க்கிறார். இதற்காகவா, இவர் வந்தார் அரசாள; இவரை நம்பினோம் நமது ரட்சகர் என்று! செச்சே! இப்படியும் ஒரு காலம் பிறக்கவேண்டுமா? ஈசா! சிவகாமி நேசா! உன் விசுவாசியின் போக்கா இப்படி இருப்பது. தேவார திருவாசகம் படித்துக்கொண்டு, திருவாய்மொழியும் பாடிக்கொண்டு, தில்லை நடேசனையும் திருமலை அப்பனையும் துதித்துக்கொண்டு, வடமொழி மேன்மையையும் வைதீகக் கோட்பாடுகளையும் பாராட்டிக் கொண்டிருக்கும், ஓமந்தூரார், மடாலயங்களைக் கட்டுப்படுத்தும் மசோதா கொண்டுவருகிறார்—கேட்டால், மதம் க்ஷீணிக்கக்கூடாது, ஆஸ்திகம் அழியக்கூடாது என்ற நல்லெண்ணத்தினாலேயே இதைக் கொண்டு வருகிறேன் — நாட்டின் நிலைமையும், காலத்தின் நிலைமையும் கவனித்துப் பாருங்கள் என்று நமக்குப் புத்தி கூறுகிறார்—மிரட்டவே செய்கிறார். இவர் இவ்வளவு பேசினால், இவருக்கு ஆதரவு காட்டும், இளைஞர்கள், பேசுவதைக் கேட்கவா வேண்டும். சேலம் சுப்ரமணியம் சீறுகிறார் — கோசலராம் கொதிக்கிறார்—கன்னியப்பன் கண்டிக்கிறார் — தேவநாயகய்யா தாக்குகிறார்— மதத்தின் பேரால் நடக்கும் அக்ரமம் தெரியுமாம் அவர்களுக்கு! நெருப்பைக் கக்குகிறார்கள்! கேட்டால், நாங்கள் சூனாமானாக்களல்ல —இதோ பார், கதர்ச் சட்டை, கருப்புச் சட்டையல்ல, என்று கூறுகிறார்கள். இந்த மசோதாவை, கருப்புச் சட்டைக்காரர் கொண்டு வந்தால், நமக்குத் தொல்லை இல்லையே — கடவுள் நம்பிக்கையற்ற கயவர் கூட்டம், ஆஸ்தீகத்தை அழிக்கிறது—மதத்துக்கு ஆபத்து என்று ஒரு கூச்சல் கிளப்பினால் போதும் — மசோதாவை மடியச் செய்துவிடலாம். இந்த ஓமந்தூரார், அவ்விதம் இல்லையே—வேதம், உபநிஷத், பகவத்கீதை, என்றெல்லாம் பேசுகிறார், தனக்கு மத பக்தி உண்டு என்பதற்காக மாதத்துக்கொருமுறை மௌனவிரதமிருக்கிறார், விபூதி பூசப்பட்ட நெற்றியுடன் காட்சியளிக்கிறார். அவரைப் பார்த்தால், நடைநொடி பாவனையைக் கவனித்தால், யாரும் அவரை, சாது, பக்திமான், என்று கூறுவர். அவரல்லவா நமக்கு ஆபத்து தேடுகிறார், ஆஸ்தீகத்தின் பெயரைக் கூறிக்கொண்டே! நாம் ஒரே அடியாக அவரை நாஸ்தீகர் என்று கண்டித்துப் பேச முடியவில்லையே! தர்மசங்கடமாக அல்லவா இருக்கிறது!

* * *

மடாலய மசோதாவை எதிர்க்கும் வைத்தியநாதய்யர் கோஷ்டி, இவ்விதம் எண்ணியும் பேசியும் வருகிறது.

* * *

எவ்வளவு படித்துப் பட்டம் பெற்று இருந்தாலும், தேசசேவை, பொதுஜன சேவை என்று என்னதான் பேசுபவராக இருந்தாலும், மேனாட்டுப் படிப்பும் வாதாடும் தொழிலும் பெற்று இருந்தாலும், பார்ப்பன ஜாதி என்றால், உடனே, வைதீகப் பித்தும், மதத்தின் மூலம் ஆதிக்கம் செலுத்தும் நோக்கமும் சமயம் பார்த்துத் தலைதூக்கி விடுகிறதே! பிரபலமான வக்கீல்! தேசத்தொண்டு செய்யப் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்தவர். எல்லோரும் ஓர்குலம் என்று சமரசம் பேசியவர்—அப்படிப்பட்ட, வைத்தியநாத ஐயர், சாதாரணக் குளத்தங்கரை ஐயர்மார்களின் போக்கிலே, கிளம்புகிறாரே, மசோதாவை, எதிர்க்க. மதத்தைக் காப்பாற்றுகிறாராம! இவருக்குத்தானா அந்த உரிமையும் திறமையும்!! ஏராளமான சொத்துகளைக் கொடுத்து, சுகபோகத்திலே, புரளும்படி, சிலரை வைத்திருக்கும் மடாலய முறைதான், மதமாம! இவர் கற்றறிந்த நூற்களெல்லாம் இந்த அளவுதானா இவருக்கு நல்லறிவைக் கொடுத்திருக்கின்றன! எவ்வளவு அவசியமான சீர்திருத்தம் செய்ய முற்பட்டாலும், மதம் போச்சு, கடவுள் போச்சு என்று கூக்குரலைக் கிளப்பி, முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுபவர், இந்த வைதீகர்கள், என்று சுயமரியாதைக்காரன் சொல்வதிலே, தப்பு இல்லையே! அவன் வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும்! எனக்கு இல்லாத கடவுள் நம்பிக்கையும், மதபக்தியுமா, இவர்களுக்கு! மதத்தின் மாசு போக்கவேண்டும், சுயமரியாதைக்காரர்கள் கண்டிக்கும் அளவுக்கு மதஸ்தாபனங்களிலே கேடுகள் முளைத்து விட்டன, இப்போதே அவைகளைக் களையாவிட்டால், புராதன மதமே அழிந்துவிடும் என்ற நன்னோக்கம் கொண்டு, இந்த மசோதாவைக் கொண்டுவரும் என்னையே, என் ஜெபதபம், நேமம்நிஷ்டை, விரதம் வைராக்யம், பக்திவிசுவாசம், ஆகியவற்றை அறிந்திருந்தும், என்னையே நாஸ்தீகன் என்றுகூறத் துணிகிறார்கள் இவர்கள்! நல்லது செய்ய முற்பட்டால், இந்தப் பட்டம் பெற்றாக வேண்டும் போலிருக்கிறதே! இவர்களிடம் நான் இதமாகப் பேசுகிறேன்—ஏசவில்லை—மதத்தின் சார்பிலே நின்று பேசுகிறேன், மத நம்பிக்கையற்றவனாக இல்லை—இந்நிலை

யில் இவர்கள் என்னை நிந்திக்கிறார்கள். செச்சே! இவர்களை, அந்தச் சுயமரியாதைக்காரர்களின் ஆட்சியிலே விட்டுவிட்டால்தான் சுப்படும், அவர்கள்தான் சரி, இவர்களுக்கு. அவர்கள் சூடு கொடுத்தால்தான் இவர்களுக்கு நிலைமை புரியும். அவர்கள், துப்பட்டியா, என்னைப்போல, உப்புச்சப்பற்ற முறையிலே, மசோதா கொண்டுவருவார்கள். மடாலயங்களுக்குள்ளே புகுந்து, கணக்கெடுத்து, கணக்கு வேலை முடிந்ததும், அந்தச் சொத்தை அந்தந்த வட்டாரத்து மக்களின் உடைமையாக அல்லவா மாற்றுவார்கள்! சர்க்கார், நிர்வாகம் செய்து, நிலைமையைச் சீராக்கட்டும் என்று மட்டுமே நான் கூறுகிறேன—இவர்கள் கொக்கரிக்கிறார்கள். சுயமரியாதைக்காரர்கள், நிர்வாகம் மட்டுமா கேட்டார்கள்? எதற்காக இவ்வளவு சொத்து ஒரு இடத்திலே முடங்கிக் கிடக்கிறது, என்று, ஆணிவேரை அல்லவா கல்லி எடுப்பார்கள்! ஆமாம். அவர்கள் முறைதான் சரி. இவர்களிடம் இதோபதேசம் பேசும் என்னை இந்தப்பாடுபடுத்துகிறார்களே, அவர்களிடம் ஆட்சிபோகட்டும், அப்போது பெட்டிப் பாம்பாகி விடுகிறார்கள் பார்! மதம் போச்சாம், மதம்! மடம் இருந்தால்தான் மதம் இருக்குமோ! என்ன பேதைமை!! இவர்கள் போக்கைப் பார்க்கும்போது, பேசாமல் சுயமரியாதைக்காரரே ஆட்சிக்கு வரட்டும், என்று இருந்துவிடலாமா என்று கூடத் தோன்றுகிறது. இந்த எதிர்ப்புக் கூச்சலிடுபவர்கள் வேறு கட்சியாக இருந்தால், காரசாரமாகக் கண்டித்துப் பேசி, தேசத்துரோகிகள், மடாதிபதிகளிடம் இலஞ்சம் வாங்கிக்கொண்டவர்கள் என்று வெளுத்துவாங்கலாம். எதிர்க்கும் பேர்வழிகளோ, கதர் கட்டிக் கொண்டு, காங்கிரசில் தங்கிக் கொண்டு, என் கட்சி என்று கூறிக் கொண்டும் இருக்கிறார்கள். தர்ம சங்கடமாக அல்லவா இருக்கிறது!

* * *

நிலைமை தர்ம சங்கடமாக இருப்பதாகவே கருதியும் பேசியும் வருகிறார், முதலமைச்சர் ஓமந்தூரார். அவருடைய துணைவர்களின் உள்ளமும் இதே நிலையில் இருக்கிறது.

* * *

இதென்ன தொல்லையாகிவிட்டது! ரெட்டியார் சொல்வது நியாயமாக இருக்கிறது! காங்கிரஸ் கட்சிதான் அவரும். ஐயர், கோபமாகப் பேசுகிறார்—ரெட்டியாரைக் குறை கூறி, ஐயர் சொல்கிறார், ரெட்டியார் செய்கை, நாஸ்திகம் என்று. ரெட்டியார் சொல்கிறார் நான் செய்யும் காரியம்தான் ஆஸ்திகம்—இதைச் செய்யாவிட்டால்தான், நாஸ்திகம் பரவும் என்கிறார். இருவரும் நம்ம கட்சி—காங்கிரஸ் கட்சி.

காங்கிரஸ் கட்சியின் கொள்கை தான் இது, என்று ரெட்டியார் சொல்கிறார்.

காங்கிரஸ் கட்சிக் கொள்கைக்கு இது விரோதமான செயல் என்று ஐயர் சொல்கிறார்.

நாம், யார் சொல்வதை நம்பித் தொலைப்பது?

மசோதாவை ஆதரித்துப் பிரசாரம் செய்ய முற்பட்டாலோ, இன்று மதம் சீர்கெட்டு இருக்கும் நிலை, அதன் காரணம், மடாலயங்களின் நிலைமை அவைகளால் சமுதாயம் பயன்பெறாத தன்மை ஆகியவைகளை எடுத்துக் கூறவேண்டும்—ஏறத்தாழ சுயமரியாதைப் பிரசாரமாகிவிடுகிறது—இதே பிரசாரம் புரியும் சுயமரியாதைக்காரர்களை நாம் கண்டித்து வந்தோம்—இன்னமும் அவர்களை ஏனோ 'பகைவர்கள்' பட்டியலில் வைத்தே பேசுகிறோம். யாரார் மசோதாவை எதிர்ப்பவர்கள் என்று பார்த்தாலோ, பெரும்பாலும் பார்ப்பனராகவே உள்ளனர். இதை எடுத்துக் கூற வேண்டநேரிடும், பேச முனைந்தால. இதைச் சொன்னாலோ, பார்ப்பனத் துவேஷி, வகுப்புவாதி, என்று கூறி விடுவர், நம்மை. நாம் அவ்விதம் பக்கலைப் பழக்கிவிட்டோம்! என்னசெய்வது! தர்மசங்கடமாக இருக்கிறது.

மசோதாவை எதிர்த்துப் பேசுவது என்றாலோ, நமது கட்சியினரில், யாரார், தலைவர்கள், தியாகிகள், விவேகிகள், வீரர்கள், என்று பாராட்டி வந்தோமோ, அவர்களை எல்லாம், மதத்துரோகிகள், சுயமரியாதைக் காரர்கள், நாஸ்திகர்கள், என்று கண்டித்துப் பேசவேண்டும். எப்படி அது முடியும்? நாடு எப்படி ஏற்கும்? மனச்சாட்சியும் இதற்கு இடந்தராதே! மந்திரி டாக்டர் ராஜன் எனும் ஒரே ஒரு பார்ப்பனப் பிரமுகர்மட்டும் தான் மசோதாவை ஆதரிக்கிறார்—அவர் மந்திரி, எனவே கடமைப்பட்டவர். மற்ற பார்ப்பனத்தலைவர்கள் எல்லாம், பார்ப்பனப் பத்திரிகைகள் எல்லாம் எதிர்க்கின்றனவே, இதைப் பார்க்கும் போது, காங்கிரசிலேயே, பார்ப்பனர்—அல்லாதார் எனும் இருகட்சிகள் தானாகத் தோன்றி விடுகிறதே, நாம் எதிலே இருப்பது! தர்மசங்கடமாக இருக்கிறதே!

* * *

காங்கிரஸ் கட்சியிலே, சீர்திருத்த நோக்கமுடையவர்கள், இது போலப் பேசிச்சங்கடப் படுகின்றனர்

* * *

கொடி கொடுத்தோம் — நன்கொடை கொடுத்தோம்—செங்கோல் கொடுத்தோம் சிவப்பிரசாதம் கொடுத்தோம்—சிந்தித்தோம்—காந்தியார் நினைவுக்குக் கூட்டம் நடத்தினோம்—எல்லாம் செய்தோம், எனினும், ஈசா! எம்மை இவ்வளவும் பெற்றுக்கொண்டவர்கள், கணக்கு எங்கே! என்று கேட்கின்றனரே.

நாட்டை ஆளும்கட்சி காங்கிரஸ்—இதன் நேசம் கிடைத்துவிட்டால், நமது ஆதிக்கம் கெடாது என்று எண்ணி, அந்தத் துரைத்தனத்தைத் தூபதீப நைவேத்தியமிட்டு வரவேற்றோம்—பாராட்டினோம்—புகழ்பாடினோம். இவ்வளவும் செய்தானபிறகு, மடாலயங்களைச் சர்க்காரின் நிர்வாகத்துக்குத் தரவேண்டும் என்று சட்டம் கொண்டுவருகின்றனரே, இரக்கமின்றி!

மதத்தின் மாண்பு கெடாதிருக்க வேண்டுமானால், ஆஸ்திகம் அழியாதிருக்க வேண்டுமானால், நாஸ்திக நாற்றம் நாட்டிலே கிளம்பாதிருக்க வேண்டுமானால், காங்கிரஸ் கட்சிதான் நாடாளவேண்டும் என்று நாவாரக்கூறினோம். இப்போது நமது 'அடிமடி'யில் கைவைக்கிறதே அதே கட்சி! இப்போது, அதனைக் கண்டித்தால், 'மகாஜனங்கள்' நமது வார்த்தையை ஏற்கமாட்டார்களே! நாமே அல்லவா, நமது பக்தகோடிகளுக்கும் பாமரர்களுக்கும் காங்கிரஸ் கட்சியின் சிலாக்கியத்தைப் பற்றி, உபதேசம் செய்தோம், இப்போது நாமே அந்தக்கட்சியைத்

னூற்றினால், யார் ஏற்றுக் கொள்வர்! தர்மசங்கடமாக இருக்கிறதே!!

* * *

காங்கிரசாட்சியின்மூலம், தங்களுக்கு ஒரு குறையும் நேரிடாது, அந்தக்கட்சி, காலப்போக்கையும் மீறி நிற்கும் சக்திக்கேடயத்தைத் தங்களுக்கு அளிக்கும் என்று நம்பியிருந்த மடாதிபதிகள், இதுபோல எண்ணி ஏக்கமடைகிறார்கள். தர்மசங்கடமாக இருக்கிறதேஎன்று தத்தளிக்கிறார்கள்.

* * *

மசோதாவின் நோக்கம், ஒன்றும் புரட்சிகரமானதல்ல—அதன் அமைப்பும், புரட்சித் திட்டமல்ல. ஏதோ ஓர் வகை ஆரம்ப முயற்சி! பழைய முறையில் பழுதுபார்த்து, இன்னும் சிலகாலத்துக்கு நிலை நிறுத்த முடியுமா, என்ற ஆசையின் விளைவு! இதற்கே, இவ்வளவு எதிர்ப்புக் கிளம்பிவிட்டது, 'இந்து' 'சுதேசமித்ரன்' மூலம்! உண்மையாகவே சமதர்ம மணம் கொண்ட சட்டமானால், சட்டசபையிலே, பேச்சோடு இராது போயிருக்கிறது! இந்த 'ரப்பர் பாம்பு'க்கே இவ்வளவு அமளி நடக்கிறது! ஒழியட்டும், கட்சி காங்கிரஸ் என்ற போதிலும், அதிலேயே, இரு பிரிவுகள் இருப்பது, நன்றாக நாட்டுக்குத் தெரிகிறது—அதிலே, பெருவாரியானவர்கள், சீர்திருத்தப் பாதையினர்—மிகச் சிலரே, பழைய பசலிகள், எனவே மசோதா வெற்றி பெறும்—பெற்று, என்ன பலன்? இனாம்தார் விஷயமாக இங்கு, பெஜாரடி பலம் இருந்தும், இதே வைத்தியநாத ஐயர் கோஷ்டி, டில்லி தேவதையிடம் வரம் பெற்று, வெற்றி பெற்றதல்லவா? அதுபோலவே, மடாதிபதிகள் விஷயமாகவும் டில்லி சென்று, வைத்தியநாதர்கள், தங்கள் சிறுபான்மைக் கட்சிக்கு வெற்றி தேடிக்கொள்ள முடியுமே! அவ்விதம் நேரிட்டுவிட்டால், என்ன செய்வது என்று நாம் கேட்டாலோ, ரெட்டியாருக்கும் அவர் போன்ற நல்லவர்களுக்கும் கூட, மூக்குச் சிவக்குமளவிற்கு கோபம் பிறக்கிறது டில்லி என்றும் சென்னை என்றும் பிரித்துப் பேசாதே, என்று நம்மை ஏசுகிறார்கள். டில்லிக்கு இன்றுள்ள அதிகாரம் அவ்விதம் இருக்கிறது ரெட்டியாரே! நியாயமான, சத்தியத்துக்கு உகந்ததான முயற்சிகளைக் கூட, முறியடித்துவிட முடியும், டில்லியின் தயவைப் பெற்றவர்களால். இங்குள்ள வைதீகர்கள் இந்த டில்லி தயவைப் பெற்றுவிடுவார்கள் — ஆகவேதான், நாங்கள் சொல்லுகிறோம், ஆட்சி மூலம், கோரிய பலனை அடைய வேண்டுமானால், சென்னை மாகாணத்துக்கு உண்மையான அதிகாரம் வேண்டும் என்கிறோம். டில்லியாவது இதிலே தலையிடுவதாவது—சென்னை சர்க்கார் சும்மா இருக்காது—என்றெல்லாம் கூறுகிறார்கள் காங்கிரசிலுள்ள சீர்திருத்தப்பிரிவினர். தலையிட்டால் என்ன செய்வீர் — என்னவழி— என்று கேட்டாலோ, தலையைச் சொறிகிறார்கள். வழி இருக்கிறது நண்பர்களே! திராவிடநாடு திராவிடருக்கே என்பதுதான், அது, என்று நாம் சொன்னாலோ, சீறி, செச்சே! நாட்டைப் பிளக்கிறாயா, வடநாடு தென்னாடு பேதமா, என்று வசைமாரி பொழிகிறார்கள். சிக்கலில் மாட்டிக் கொள்கிறார்கள் — சிக்குப் போக வழி சொன்னாலோ, நம்மீதே சீறுகிறார்கள் — தர்மசங்கடமாக இருக்கிறது.

* * *

சட்டசபையிலே, இந்துமத பரிபாலன போர்டிடம் இருக்கும் நிர்வாகத்தை ஒழித்துவிட்டு, மடாலயங்களைச் சர்க்காரே நிர்வகிக்க வேண்டும், என்ற, சாதாரண மசோதா, கிளப்பிவிட்டிருக்கும் சஞ்சலத்தையும் எதிர்ப்பையும், சிக்கலையும் சினத்தையும், கண்டு, நாம் இதுபோல எண்ணுகிறோம்.

இவ்வளவு 'தர்ம சங்கடமான' நிலை ஏற்படுகிறது, மடாலய ஒழிப்பு அல்ல, மடாலயக் கண்காணிப்புக்குச் சர்க்கார் ஒரு திட்டம் வகுக்கும் போது. மகாராஜாக்கள், ராஜாக்கள், நவாபுகள், காட்டின இடத்தில் கையொப்பமிடக் கண்டனர் மக்கள். ஜெமீன்தாரர்கள், கொடுத்ததைக் கொடுங்கள் என்று கேட்டுப் பெற்றுக் கொள்ள, பந்தயம் போட்டுக் கொண்டு ஓடிவருவதைக் கண்டனர் மக்கள். ஜுனகத் நவாபு ஓடியதையும், நிஜாமின் சரணாகதியையும், புதுக்கோட்டையின் கதியையும் மக்கள் கண்டனர். மாவீரன் சிவாஜி கண்ட சாம்ராஜ்யத்தின் கடைசி சின்னமாக இருந்த, கோலாப்பூர் சமஸ்தான மன்னராட்சி இந்தக் கிழமை முடிவுற்று, மராட்டிய அரசவம்சம் என்பதே பழங்கதையாகி விடுவதைப் பார்க்கிறோம். இவ்வளவும் முடிந்தது—முயற்சி குறைவு—எதிர்ப்பு ளைத்துக்குரிய அளவுதான் இருந்திடக் கண்டோம்.

மன்னரும் சீமான்களும், கிளப்ப முடியாத படைகளை, ஜமீன்தாரிகளைச் சார்பிலே, கிளப்ப முடிகிறது!! மன்னரும் ஜெமீன்தாரரும் கூடாது என்று கூறின உடனே, மக்கள் ஆம் என்றனர், அதுதான் ஜனநாயகமென்றனர், ஏன் இந்த உழைப்புறிஞ்சிகள் உல்லாச புருஷர்களாக இருக்கவேண்டும் என்று கேட்டனர்! மடாதிபதிகள் ஒழிக்கப்படவில்லை—அவர்களிடம் உள்ள சொத்து, பொதுவுடைமையாக்கப்படவில்லை—மக்களாட்சிக் காலமான இக்காலில், மதத்தின் பெயர் கூறி மக்களை அடக்கும் முறை கூடாது என்று கூறவில்லை—நிர்வாகத்தைச் சர்க்கார், மேற்கொள்வது என்ற சாமான்யமான முயற்சிதான் நடைபெறுகிறது, ஆனால், மக்களின் மனம் மருட்சி அடையும் விதமாக, நிலைமை இருக்கிறது! யாருக்கும், இரும்புப் பெட்டிக்கும் இல்லாத வலிவு, எதிர்ப்புச் சக்தி, புல்லுக்கு இருக்கிறது—நம் நாட்டில்—வானில் விமானமும், வீடுகளில் ரேடியோக்களும் உள்ள காலத்தில்—வரம் தரும் காலம் அல்ல—வச்சிராயுதம் வீசும் காலமல்ல—!

இந்த சூட்சமத்தைத்தான், பல

## தெரியுமா?

சென்னை மாகாணத்தில்,
25,000 தர்ம ஸ்தாபனங்களும்
27,000 கோயில்களும்
3000 மடங்களும்
இருக்கின்றன.

நாட்களாக நாம் எடுத்துக்கூறிவந்தோம்—பழைமை ஆதிக்கம் செலுத்துகிறது — வைதீகம் ஆட்சி செய்கிறது—அதன் சர்வாதிபத்யம், மற்ற ஏகாதிபத்யங்களை எல்லாம் விடப் பலம் பொருந்தியது—அதைத் தாக்கித் தகர்த்தாலொழிய, தன்னாட்சி பெற்றாலும், மக்களாட்சி, நல்லாட்சி ஏற்படாது என்று.

புல்லுக்கு என்ன இவ்வளவு பேச்சு! — என்றனர்! சட்ட சபையிலே, சண்டமாருதத்தைக் கிளப்புகிறது, அந்தப்பழைய, பயங்கர, ஆயுதம், அரசு பலவற்றை அழித்த ஆயுதம்! இந்தச்சட்ட சபையின், வெற்றி தோல்வியுடன், இருந்துவிடாது — டில்லி நோக்கிச் செல்லும் — ஆம்! அதன் சக்தியின்முன்பு, தடிபடியால் தழும்பேறிய காங்கிரஸ் வீரரின் சக்தியும், திக்குமுக்காட வேண்டி வருகிறது! இந்த உண்மையைக் காங்கிரஸ் நண்பர்கள் உணருகிறார்கள்—உளம் நொந்து பேசுகிறார்கள்—தர்ம சங்கடத்தில் சிக்கிக்கொண்டோமே என்று சஞ்சலப்படுகிறார்கள். தர்ம சங்கடம் ஒழிய வழி இல்லாமற் போகவில்லை. நமது கூட்டுறவுதான், அந்தவழி. நாம் பிரிந்திருக்கக் காரணம் இல்லை— சமுதாயத்துக்கு அதனால் இலாபம் இல்லை! இடுக்கித்தாக்குதல், நல்லதுதான் ஓரளவுக்கு — உள்ளிருந்து புல்லர்களைத் தாக்கும் காங்கிரஸ் படையும், வெளியே இருந்து தாக்கும் திராவிடர் கழகப் படையும் உள்ளன. ஆனால், சில குறிப்பிட்ட சமயங்களிலே தவிர, இந்தநிலை நமக்குப் புரியாமல் போவதால், சூதுக்காரர் வெற்றி பெற்றுவிடுகிறார்கள் — நாம் ஒருவரை ஒருவரே தாக்கிக்கொள்ளுகிறோம்—ஒருவரை ஒருவர் இழித்தும் பழித்தும் பேசிக்கொள்வதின்மூலம்! இருபடைகளின் பலமும் சிதறும்— இருவருக்கும் மூலநோக்கமாக உள்ள நல்லாட்சிக்குக் குந்தகம் விளையும்.

மடாலயங்களின் கண்காணிப்பு சம்பந்தமாகவே, இவ்வளவுசங்கடம் என்றால், மடஒழிப்புக்கு—மட ஆலயங்களைமட்டுமல்ல நாம் குறிப்பிடுவது, பன்னெடுங்காலமாக அடிமைத்தனத்தில் உழன்றதால், மடமை மிருந்துவிட்ட மக்களின் மன மாசு முழுவதையுமே குறிப்பிடுகிறோம் — அந்தமகத்தான பணிபுரியக்கிளம்பும்போது, எவ்வளவு எதிர்ப்பு இருக்கும் என்பதைக் காங்கிரஸ் நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். பிரிந்திருக்கிறோம் — ஒருவரை ஒருவர் பகைத்துக்கொண்டு வாழ்கிறோம்—எனினும், எமது தலைவர், நீறு பூசா நாத்திகர் — உமது தலைவர், நமது முதலமைச்சர், நீறு பூசிய நாத்திகர், என்றுதான் நிந்திக்கப்படுகின்றனர்! இந்தச் சூட்சமத்தைத் தெரிந்துகொள்ள, இந்தச் சம்பவம் உதவினால் போதும். உதவும். நம்புகிறோம்.



“இரணியன் அல்லது இணையற்ற வீரன்” என்ற நாடகத்தை நடித்துச் சிறைபுகுந்து திரும்பிய தோழர்களுக்குக் காஞ்சிபுரத்தில் 25—12—48-ல் நடைபெற்ற வரவேற்பு விழாவில் கலந்துகொள்வதற்காகச் செங்கற்பட்டிலிருந்து தோழர் M. சின்னையா அவர்கள் தலைமையில் கால் நடையாக வந்த தோழர்களை இப்படத்தில் காணலாம்.

சென்றவாரத் தொடர்ச்சி

# செக்கோஸ்லோவேகியா

## 2

[அண்ணாத்துரை]

ஜான்ஹஸ், புரட்சிக்காரன்! வேதநிந்தகன்! மார்க்க கட்டளையை மீறிய மாபாவி! சம்பிரதாய வைரி! சனாதன கிருஸ்தவ மார்க்கத்தைக் குலைத்து, மதத் தலைவரின் சட்ட திட்டங்களைச் சின்னாபின்னமாக்கி, விவரமறியாத, விளக்கமறியாத மக்களிடம் விதண்டாவாதம் பேசிப், பாபப்படுகுழியிலே அவர்களைத் தள்ளும் தூர்த்தன்! — என்றே பலரும் பழி சுமத்தினர். ஜான்ஹஸ் மீது விரோதம் கொண்டோர் இது போலக் கூறினர். அவருடைய அறவுரையைக் கேட்டு அகமகிழ்ந்த ஆதரவாளர்கள், ஜான்ஹஸ், மார்க்கத்தின் மாசுதுடைக்கும் மகா பண்டிதன், புண்யமார்க்கத்திலே புகுந்துவிட்ட கேடுகளைக் களைந்தெறியும் கர்மவீரன், தூய்மைக்காகப் போரிடும் மாவீரன், கிருத்தவ மார்க்கத்தை, அறிவுக்குப் பொருத்தமான அறநெறியாக்கி, மதப் போர்வைக்குள் புகுந்து கொண்டு, மக்களின் மந்த மதியைப் பயன்படுத்திக்கொண்டு, மதோன்மத்தர்களாக வாழும் எத்தர்களின் பிடியிலிருந்து, ஏசுவின் விசுவாச மார்க்கத்தை மீட்ட பெரியோன், என்று பாராட்டினர்.

கண்டித்தவர்கள், பாராட்டினவர்கள் ஆகிய இருசாராருக்கும், மார்க்கத் துறையிலே பணிபுரிந்த ஜான்ஹஸ் மட்டுமே தெரிந்தது—ஆனால் அவர், ஆற்றிய அரும்பணி, மார்க்கத் துறையுடன் நின்றுவிடவில்லை. தாயகத்திலே, தனிப்பண்பும், தன்மானமும் தழைக்கவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, அவர் மக்களின் வாழ்வுடன் தொடர்பு கொண்ட எல்லாத்துறைகளிலும் பணியாற்றினார் — அந்தப் பெரும் பணியின், ஒரு பிரிவு, ஒரு பகுதி தான், அவர் மார்க்கத்துறையிலே கிளப்பிய புயல்! அந்தப் புயலின் வேகமும் கடுமையும் கண்டவர்கள், ஜான்ஹஸ், அந்த ஒரு காரியத்தை மட்டுமே செய்தவர், என்று எண்ணினர். அவரைக் கொளுத்திய கொடியவர்களும், அவருடைய அணிவகுப்பிலே நின்ற ஆதரவாளர்களும், ஜான்ஹஸ், ஆற்றிய பணியின் முழு உருவைக் காணவில்லை.

ஜான்ஹஸ், செக்நாட்டின் மக்களின் வாழ்வே, போலிமயமாக இருக்கக் கண்டார். சூதும் சூழ்ச்சியும், சகல மூலைகளிலும் நின்று, தன் நாட்டு மக்களைத் தாக்கக் கண்டார். அரசியல், சமூக இயல், மத இயல், கலைத்துறை, எதும் எத்திக்குநோக்கினும், செக்நாட்டு மக்களை, செக்கிழுக்கும் மாடுகளாக்கும் நிலையே இருக்கக் கண்டார். ஜெபமாலை மூலம் ஆதிக்கம் செலுத்தினர், அன்னியர். துப்பாக்கிகொண்டும் அவர்கள் ஆதிக்கம் செலுத்தினர்! ஏடுகளைக் கொண்டும் அன்னியர் ஆதிக்கம் செலுத்தினர். படைவீரர், பாதிரிமார்கள், புலவர்கள்—எனும் மூன்று வகைச் சேனைகளும் சேர்ந்தே செக்நாட்டைச் சிதைத்திடக் கண்டார். வழிபாட்டு முறையிலே, அறிவுக்குப் பொருந்தாத பல கேடுகள் புகுந்துவிட்டதை மட்டுமல்ல, செக்கோ நாட்டு மக்களின் வாழ்க்கை முழுவதிலுமே, நஞ்சு கலக்கப்பட்டிருப்பதைக்கண்டு கலங்கினார்.

நாட்டு வரலாறோ, அஞ்சா நெஞ்சர்களைப் படைவீரர்களாகக் கொண்டு, வெற்றி பல கண்டு, வீர வேந்தர்கள் பலர், வாழ்ந்துவந்தனர், ஓர் காலத்தில், என்பதைக் காட்டிற்று. ஆனால் நாட்டின் வீதிகளிலோ, ஜெர்மானியர்கள், ஆணவத்துடன், ராணுவ உடையுடன், உலவியும், உரத்த குரலில் பேசியும் இருந்திடக் கண்டார்! ஏடு, தன் தாய் நாட்டின் பழம் சிறப்பைக் காட்டி, என்ன பயன்! நாடு, சீர்குலைந்து கிடந்தது.

தாயகத்தின் தனிச் சிறப்பு தீட்டப்பட்டிருந்த, ஏடுகளைப் படிக்கும் போதும், கல்லூரியிலே, பேராசிரியராக இருந்ததால், பழம் வரலாறு பற்றி மாணவர்களுக்கு எடுத்துக் கூறும்போதும், ஜான்ஹஸ், பூரிப்படைவார்—ஆனால், தன் நாட்களிலே, நாடு இருந்த நிலையைக் காணும்போதோ, கண்கசியும்! பெயரே, மாறிவிட்டது! செக்கோநாடு! தாயகம், தனிச் சிறப்புடன் இருந்த காலத்தில், தனிப் பெயரே இருந்தது — போகீமியா என்று அழைக்கப்பட்ட நாடு, அன்னியரின் வேட்டைக்காடு ஆவதற்கு முன்பு, தனிப்பண்புடன் விளங்கிற்று, என்பதற்கு, ஆதாரங்கள் ஏராளமாகக் கிடைத்தன, ஜான்ஹஸ், பேராசிரியராக இருந்தகாலை. —ஏறத்தாழ, நம் நாட்களிலே, நாம், திராவிடநாடு எனும் தனிப்பெயருடன், தனிப்பண்புடன், தனிஅரசு செலுத்திய காலம் ஒன்று இருந்தது என்பதை, இன்று உணருகிறோமே, அதே நிலை!

போகீமியா! தாயகம்! அடிமைத் தளைகள் இல்லாத நிலை! வீரர் வாழ்ந்த காலம்! சீரழிவு ஏற்படாத வேளை! ஐரோப்பிய உபகண்டத்திலே, அந்தப் போகீமியாவுக்குத் தனியான ஓர் மதிப்பு இருந்தது! தனி அரசு தழைத்திருந்தது! அந்தப் போகீமியா, வரலாற்று ஏடுகளிலே புதைந்து கிடந்தது—கண்ணெதிரே கிடந்ததோ, நலிவுற்ற, நிலைகுலைந்த நாடு—செக்கோநாடு! — ஏறத்தாழ, இன்றைய திராவிடத்தின் நிலையே தான்.

ஏடுகளிலே காணப்பட்ட தாயகத்தின் எழிலை, ஜான்ஹஸ், எடுத்துச் சொன்னபோது, யார் நம்பினர்? யார் மதிப்பளித்தனர்? பிதற்றல், என்றனர் சிலர்! வீண்பேச்சு என்றனர் பலர்! ஆமாம், அதனாலென்ன, என்று அலட்சியமாகப் பேசினர் பலர், அவர்கொண்ட ஆர்வம், மற்றவர்களுக்கும் ஏற்படச் செய்வது எளிதான காரியமல்ல. புதைபொருளைக் கண்டெடுக்கும் ஆராய்ச்சியாளர்கள், எங்ஙனம், ஒரு பாண்டத்தின் துண்டு, பழங்கருவியின் சிறுபகுதி, தகடுகளிலே, தென்படும் வரிவடிவம் ஆகியவற்றைக்கொண்டு, 'அன்றோர் நாள்' இங்ஙனம் இருந்திருக்க வேண்டும் என்று நிர்மாணிக்கிறார்களோ, அது போலத்தானே நெடுங்காலமாக நிலை

குலைந்து போன ஒரு நாட்டின், பழம் பெருமையைக் கண்டறிய முடியும். ஆராய்ச்சியாளர்களின் முடிவுகளைப் பாமரர், உடனடியாக நம்புவரோ! நம்பும் அளவுக்குப் பாமரருக்கு மனவளம் இருக்கமுடியாதல்லவா? அதுபோலத்தான், பொஹிமீயாவின் பூர்வீகத்தை, நாடு உருமாறி, பெயர்மாறி, நிலைமாறி நலிந்து போயிருந்தபோது, யார் எடுத்துக் கூறினாலும், சுலபத்திலே நம்பவோ ஆர்வம் காட்டவோ, அந்த உன்னத நிலையை ஏன் மீண்டும் பெறலாகாது என்று எண்ணம் கொள்ளவோ எப்படிப் பாமரரால் முடியும்? பாமரர் மட்டுமென்ன! படித்தவரென்போர்களிலே, மிகப் பெரும்பாலோர் கூடத்தான்! பிணத்தைவைத்துக் கொண்டு மாரடிக்கும் பித்தன், என்பர்! பழங்கதையைக்கிளறி, புதிய விரோதத்தை வளர்க்கிறான் வம்பன், என்பர்! நமது நாட்களிலே, நாம் நிந்திக்கப்படுகிறோமல்லவா, திராவிடநாடு ஆரிய வேட்டைக்காடாகா முன்னம், வாழ்ந்த வகையை எடுத்துக்கூறும்போது! அதே நிலைதான், அந்நாளில், தன் நாட்டிலே, ஜான்ஹஸ், கண்டது. ஒரு நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் மறந்து போன, மதிப்புத்தர மறுக்கும் உண்மையை, நிலைநாட்டுவது, செங்குத்தான மலைமீது ஏறுவது போன்ற சிரமமான, காரியம மட்டுமல்ல, செங்குத்தானமலைமீது, வழவழப்பான மிதியடி போட்டுக்கொண்டு, சிறு தூறல் பெய்து கொண்டிருக்கும் வேளையில், ஏறுவது போன்ற, ஆபத்தான வேலையாகும்.

கண்டுபிடித்துவிட்டானய்யா, யாருக்கும் தெரியாத மகாரகசியத்தை!—என்று ஏளனம் செய்வோர் ஒருபுறம்! சகலகலாவல்லவன், வேறுயாருக்கும் புலப்படாதிருந்த சரித்திர உண்மையைக்கண்டுபிடித்துவிட்டானப்பா, என்று, கேலிசெய்வர்! மூளைக்குழப்பம், மனப்பிராந்தி! —என்று பேசுவர். வேறுவேலை இல்லை, சுடுகாட்டிலே சென்று, எலும்புகளைத் தோண்டி எடுத்து வந்து, அடுக்கப் பார்க்கிறான், விசித்திர வியாபாரி, என்பர் — வேறு பலப் பல கூறுவர்! எதுவரையில்? சொல்லுபவருக்குச் சலிப்பும் கோபமும் ஏற்படாமல், எதிர்ப்பையும் ஏளனத்தையும் பொருட்படுத்தாமல், அறிவைப் பரப்பும் பணியில் இடைவிடாது ஈடுபட்டு, மக்களின் அலட்சியப் போக்குக்கு, அதிர்ச்சி ஏற்படும்படி செய்து, உண்மை அவர்கள் உள்ளத்திலே, புகுவதற்கு வழிசெய்யும் வரையில், கண்டவர்களும் கண்டனச் சொற்களை வீசியபடிதான் இருப்பர்—ஏமாளிகளை ஏவிவிட்டபடிதான் இருப்பர்—எதிர்ப்பைக் காட்டியவண்ணமே இருப்பர் —விரோதம் எனும் விஷத்தைக் கக்கியபடிதான் இருப்பர்! உண்மை எவ்வளவுக் கெவ்வளவு அதிக ஆழமாகப் புதைக்கப்பட்டுப் போயிருக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு, பாடு அதிகம படவேண்டும், மக்கள் மன்றத்துக்கு, உண்மையைக் கொண்டுவந்து காட்ட. பலப்பல நூற்றுண்டுகளுக்கு முன்பு இருந்து, கபடரால் மறைக்கப்பட்டுப் போன உண்மையை, கயவரின் மொழி கேட்டுக் கேட்டுக் கருத்துத் தெளிவை இழந்துபோன மக்களிடம், கூறுவது, என்றால், சுலபமான காரியமா! உள்ள உரம் எவ்வளவு வேண்டும்? தன்னல மறுப்பு எவ்வளவு வேண்டும்! ஜான்ஹஸ், இந்த மகத்தான காரியத்தைச் சாதித்தார்! தாயகத்தின் பெருமையை, மக்களின் மனதிலே, மீண்டும் குடியேறச் செய்தார்! மணி, மாசு படிந்திருக்கிறது—என்று மக்கள் உணரும்படி செய்தார்! தனி அரசும் தனிப் பண்பும் பெற்றிருந்த தாயகம், ஏன் தாழ்நிலை பெற்றது, தளை பல கொண்டது என்பது பற்றிச் சிந்தித்தபோது ஒரு பெரும் உண்மை அவர்களுக்குக் கிடைத்தது. தாயகம் தாழ்நிலை அடைந்ததற்கு முக்கியமான காரணம், மூலகாரணம், களத்திலே ஏற்பட்ட தோல்வி அல்ல—வீரம் குன்றியதால் அல்ல—என்று அறிந்தனர்! தாயகம் தாழ்நிலை அடைந்ததற்குக் காரணம், தாய்மொழி அழிக்கப்பட்டதுதான் — என்பதை உணர்ந்தனர். மொழியை இழந்தோம். வாழ்க்கை வழியை இழந்தோம் என்று உணர்ந்தனர்.

பொஹிமியா நாட்டு மன்னர்களும், கொலு மண்டபக் கோமான்களும், தாயகத்தின் வீழ்ச்சிக்குத் தங்களையும் அறியாமலேயே, காரணமாக இருந்தனர்.

பொஹிமீயா, வளமுள்ள, வீரக்கோட்டமாக விளங்கியபோது, அந்த வாழ்வும் வளமும் வீரமும் வெற்றியும், மக்களின் மனநிலையிலேயிருந்து பூத்திடுவன, என்பதை அறியாமல், தமது களிப்பு கேளிக்கையும், மட்டுமே, முக்கியமெனக் கருதிய, முடிதாங்கிகள், தாய்மொழி அழிக்கப்படுவதைக் கண்டும் காணாதாராக இருந்தனர். மொழி அழிந்தது, நாடும் அழிந்தது.

பொஹிமீய அரச குடும்பத்தினர், ஜெர்மன் இளவரசிகளை மணம் செய்து கொள்ளலாயினர்-காதல், நாட்டு எல்லையைக் கடந்தது!! ஜெர்மன் இளவரசிகளின் எழில், பொஹிமீயா நாட்டு அரண்மனைகளிலே, பிரகாசித்தது. பூரித்தனர் பிரபுக்கள்! எனவே, அவர்களும், ஜெர்மன் நாட்டுச்சீமாட்டிகளைத் தேடிப் பெற்றனர். சின்னாட்களிலே பேட்டைக் குடியினருக்கு, நாகரீக சின்னமாகி விட்டது, ஜெர்மன் நாட்டு நாரீமணிகளை மணம் செய்து கொள்ளும் முறை! இந்தக் களிப்பும, மதிப்பும், கட்டுக்கு அடங்கியதாக இருக்க வேண்டுமே, என்பதிலே, பொஹிமீயச் சீமான்கள் அக்கரை செலுத்தவில்லை. புள்ளிமான் துள்ளி விளையாடுவதைக் காணக் காணக் காட்சிதான்! அதற்கேற்ற அழகிய தோட்டம் அமைத்து, மான் ஓடி ஆடக் கண்டால், ஆனந்தமாகத்தான் இருக்கும். ஆனால் மான் ஆடுவதைக் காண்பதை மட்டுமே மனதிலே கொண்டு, மற்றதை மறந்து, தன் சிறு மதலையை, மான் தன் கொம்பினால் குத்திக் குடலை வெளியே கொண்டுவருவதையுமா கண்டு சகிக்க முடியும்! பொஹிமீயச்சீமான்கள், அதையும சகித்துக் கொண்டனர்!! ஜெர்மன் நாட்டு உல்லாசிகளின், கீதமும் நடனமும, கேளிக்கையும், மாளிகைகளிலே புதுவிருந்தாக அமைந்தது-பூரித்தனர் பூமான்கள் ஆனால் அந்த அழகிகள், அழிக்கும் கருவிகளையும் உடன் கொண்டு வந்தனர்-அதனை அறியவில்லை, சீமான்கள்.

மணப்பெண்கள், தமது அழகை மட்டுமல்ல, பரிவாரமும் கொண்டு வந்தனர், தம்முடன். மாளிகையிலே, ஜெர்மன் மாது புகுவாள், பொஹிமீயச் சீமானின் மனைவியாக. அவளுடன் தோழிகள், பணியாட்கள், நண்பர்கள், இசைவாணன், நாட்டிய ஆசிரியன், கதை கூறுவோன், ஓவியம் தீட்டுவோன், எனும்பல்வேறு வகையிலே, பலப்பல ஜெர்மனியர் நுழைவர்! ஒவ்வொரு மாளிகையும் இது போலாயிற்று. பொஹிமீயச் சீமான்களை மணம் செய்துகொண்ட ஜெர்மன் சீமாட்டிகள், தாம் குடிபுகுந்த இடத்திலே, 'ஜெர்மன் மணம்'

கமழவேண்டும் என்றனர்—வேறோர் நாட்டில், வேறோர் இனத்தவர் உள்ள இடத்திலே, குடிபுகுந்தது விளங்கும்படி, சகலமும் பொஹீமிய மயமாக இருந்துவிட்டால், உல்லாசிகளின் உள்ளம் உருகிவிடும்—எனவே பொஹிமீய மாளிகைகளிலே. சகலமும் ஜெர்மன் மயமாக்கிக் கொண்டனர்.

பொஹிமீயச் சீமான், தன் மாளிகையிலே, ஜெர்மன் சீமாட்டியை மட்டுமல்ல, ஜெர்மன் பாட்டு, ஜெர்மன் சித்திரம், ஜெர்மன் சமயல், ஜெர்மன் ஆசிரியர்என்றமுறையிலே, ஜெர்மன் வாடை வீசிடக்கண்டான்.

ஜெர்மன் மாதரசி, தன்னுடன் வந்து குடியேறியவர்களுடன், உரையாடுவாள், ஜெர்மன் மொழியில்—அவளை மணம் செய்துகொண்ட பொஹீமீயச் சீமான் புன்னகையுடன் அவளை நோக்குவான், அவள் ஜெர்மன் மொழியின் அவசியத்தைக் கூறினாள் முதலில்-அளவளாவ வேண்டாமா காதலர்கள், அதற்கு-ஆம் என்றான பொஹீமீயச் சீமான-ஜெர்மன் மொழி படிக்கும் மாணவனானான்! மொழியை மட்டுமா! ஜெர்மன வாழ்க்கை வழியையே கற்றுக்கொண்டான்! ஜெர்மன் மூலாம் பூசிக்கொண்டான், அதிலே ஓர் இன்பம், பெருமை கண்டான்.

நாடு முழுவதுமா மாளிகைகள் இருக்கும்! மாளிகைகளிலே மட்டுந்தானே, இந்நிலை ஏற்பட முடியும்! பொஹீமீய நாட்டு சாமான்யர்கள், ஜெர்மன் மூலாம் பெறமுடியுமா! அவசியமும் இல்லை-செலவும அதிகம்!! ஆகவே சில காலத்துக்குள், பொஹீமீயாவிலே இருவேறு வாழ்க்கை வழிகள் — சூழ்நிலைகள் அமைந்துவிட்டன — மேட்டுக்குடியினர், ஜெர்மன் மூலாம் பூசிக்கொண்டனர் — சாதாரண மக்கள், பொஹீமியப் பண்புடன் இருந்தனர்—வேறு வேறாகத் தெரியலாயிற்று பேதம — பேதத்தை முதலில் கவனிக்கவில்லை—பிறகு கவனிக்கவும் அதுபற்றிப் பேசவுமாயினர். என்னென்ன நடைபெற்றிருக்கக்கூடும் அந்நாட்களில், பொஹீமிய மாளிகையிலே, என்பதைச் சிரமமின்றி யூகித்தறிய முடியும். அரசமன்றத்திலிருந்து திரும்புகிறான் பொஹீமியச் சீமான்! அவனைத்தன் புன்னகையால் வரவேற்கிறாள் ஜெர்மன் மாது. பிறகு, விழுந்து விழுந்து சிரிக்கிறாள்—சிரித்துவிட்டு, காரணம் கேட்ட கணவனிடம கூறுகிறாள், "நாதா! இன்றுதான் நான் உங்கள் நாட்டு நாட்டியத்தைப் பார்த்தேன்—அசல் குரங்கு குதிப்பதுபோலவே இருந்தது" என்று கூறுகிறாள். சீமானிடம் வேறு யாரும் அவ்விதம் கூற முடியாது — கூறினால் கோபங்கொண்டு, "உங்கள நாட்டு நாட்டியம் ஒழுங்கானதோ! எருமை சேற்றிலே இறங்கியதுபோலிருக்கிறது" என்று கண்டித்திருப்பான். ஆனால், கூறுபவள், தன்கோமளம்! அவளுடைய மொழியிலேயும் விழியிலேயும அவன் ஆனந்தத்தைக் காண்கிறான்—ஆமடி! தங்கம்! அதுகளின் ஆட்டம் அப்படித்தான்—குரங்காட்டம்தான!—என்று கூறுகிறான், அவளை அணைத்தபடி! எங்கள் நாட்டியம எப்படி? என்று கேட்கிறாள் எழிலரசி, முதல்தரமானது! என்று கூறுகிறான் காதலால ஏவலனானோன் — "நாதா! எங்கள் நாட்டு நாட்டியத்தை ஏன் தாங்கள் கற்றுக்கொள்ளலாகாது" என்று கெஞ்சுகிறாள்—அவன் ஆடக் கற்றுக்கொடுக்கிறாள். பொஹீமிய மாளிகையிலே, ஜெர்மன் கீதம், ஜெர்மன் நாட்டியம! பொஹீமியக் குடியானவன் இக்காட்சியைக்கண்டுவிட்டு, மெல்லியகுரலில் கூறிக்கொள்கிறான் "ஆட்டிப்படைக்கிறாளே!" என்று. நாளாகவாக, ஜெர்மனி பொஹீமியாவை, ஆட்டிப் படைக்கலாயிற்று—ஜெர்மன் மொழிதான் உயர்ந்தது—அதைப் பேசுவதுதான் நாகரிகம்—அம்மொழி பேசுவோர்தான் மதிப்புக்குரியவர்கள்— ஜெர்மன்கலைதான் சிறந்தது, அதனை அறியாதானும் அறியாதாரே! — பொஹீமியாவிலே, இப்படிக்கருத்துப் பரவிவிட்டது! தாய்மொழி, தாயகத்தின் பழைய முறைகள் யாவும் பரிகசிக்கப்பட்டன—அவை, பாமரரின் போக்கு என்று எள்ளிநகையாடப் பட்டன. இப்படியும் நடைபெற்றிருக்க முடியுமா என்று எண்ணுவர் எவரும! பொஹீமியாவில்மட்டுமல்ல, தாய்மொழியைத தாழ்நிலைக்குக்கொண்டு வரவிடும எவருக்கும ஏற்படும், இந்த இழிநிலை! ஜெர்மன் மொழிதான், படித்தவர், பண்புடையோர், பேசும் மொழி, என்று பொஹீமியாவிலே, கருத்துப் பரவிற்று. சோறு போடு! சாறு கொண்டுவா! தண்ணீர் கொடு! —இது, இன்றும் தாழ்ந்த தமிழகத்திலே, நாகரிகமறியாதார் பேச்சு என்றுதானே, சாதம் போடு—ரசம் கொண்டுவா—ஜலம் கொடு—என்று கேட்கும, ரசிகர்கள் கூறுகின்றனர்!

(தொடரும்)

D-பக்கத் தொடர்ச்சி

என்று தோன்றியதால் இதை எழுதலானேன்."

இவ்வறிக்கை, சிதம்பரனாரின் குடும்பம் இன்று என்ன நிலையில் இருக்கிறதென்பதை விளக்கியும், அதற்கான செய்யவேண்டுமென்பதை வற்புறுத்தியும் வெளியிடப்பட்டதாகும். சிதம்பரனாரின் பெயரால் கப்பலோட்டும் நிலையைப் பெற்ற இந்தச் சமயத்தில், அதற்காகவே தம்முடைய வாழ்க்கையை வறுமையின் இருப்பிடமாக்கிக் கொண்டவரின் குடும்பத்தைப்பற்றி எண்ணவும், அதற்கான ஒரு நல்ல ஏற்பாட்டை-உதவியைச் செய்யவும் பொதுமக்களும் அரசாங்கமும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

ஒப்பற்ற சேவை புரிந்த சிதம்பரனாருக்கு நாடுகாட்டவேண்டிய நன்றியறிதலையும், செய்யவேண்டிய கடமையையும் இதுவரை மறந்திருந்தது போல் இனியும் இருக்கக்கூடாதென்பதையும் இந்தச் சமயத்தில் நினைவூட்டுவதோடு, செய்நன்றி கொல்லாத தமிழர் பண்பாட்டினை நிலைநாட்டவும், சிதம்பரனார் புகழ் என்றும் நிலைக்கவும், அவருடைய குடும்பம் மனவேதனையால் நொந்து போகாதபடி பார்த்துக் கொள்ளவும் இப்போதாவது தமிழ் மக்கள் முன்வந்து ஆவன செய்யவேண்டுமென்பதே எமது வேண்டுகோளும் விருப்பமுமாகும்.

## தீர்ப்பளிக்கப்பட்டது.

காந்தியடிகளைக் கொன்ற காதகன் நாதுராம் விநாயக கோட்சேக்கும், நாராயண ஆப்தேக்கும் 10—2—49-ல் மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்தக் கொலைக்கு உடந்தையாக இருந்த மற்றும் ஐவருக்கு ஆயுள் தண்டனையும், இதில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்பட்ட தோழர் விநாயக தாமோதர சவர்க்காருக்கு விடுதலையும் நீதிபதி ஆத்மசரண் அவர்களால் தீர்ப்பளிக்கப்பட்டது.

# ★ வீரர் சிதம்பரனார் ★

—❀—

மறைந்த மாவீரர் வ. உ. சி. அவர்களையும், அவர் நாட்டின் விடுதலைக்காக ஆற்றிய அரும் பெரும் தொண்டுகளையும் மக்கள் மறக்க முடியாது. பேரும், புகழும் பெற்றுச் சொந்த வாழ்க்கைக்குத் தங்களுடைய உழைப்பும் தேசபக்தியும் பயன்பட வேண்டுமென்ற சுயநல நோக்கம் கொண்டவர்களைப் போலன்றி, உண்மையாகவே நாட்டுக்கு விடுதலையும், மக்களுக்கு நல் வாழ்க்கையும் ஏற்பட வேண்டுமென்ற பொதுநல நோக்குடன்—பேரையும், புகழையும் விரும்பாமல்—ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்தி நாட்டுப் பணியாற்றியவர்.

வெள்ளையன் இந்நாட்டை விட்டு விரட்டப்படவேண்டுமானால், அவனுடைய ஆதிக்கத்தின் ஆணிவேரான வியாபாரத் துறையைத் தான் முதலில் கைப்பற்றவேண்டுமென்ற ஒருசிறந்த திட்டத்தை முதலில் வகுத்த பெருமை சிதம்பரனாருக்கே உரியதாகும். 1906-ல் அவரால் ஆரம்பிக்கப்பட்ட "சுதேசிக் கப்பல் கம்பெனி" இந்தச் சிறந்த நோக்கத்துடனேயே தொடங்கப்பட்டதாகும். என்றாலும் அவருடைய திட்டம் வெற்றி பெறமுடியாதபடி அரசாங்கம் அவரை நாட்டைவிட்டே துரத்திவிட்டது—தீவாந்திரத் தண்டனை கொடுக்கப்பட்டது. கடலில் கப்பலோட்ட முயன்ற ஒரு தமிழன், கடல் நடுவே கப்பல் போல் மிதந்துகொண்டு இருக்கும் ஒரு தீவில் சிறைவைக்கப்பட்டார்.

ஆறாண்டுகள் பொறுத்து வீரர் சிதம்பரனார் சிறையினின்றும் வெளியே வந்தபோது, வறுமையென்னும் கொடிய பகைவனே அவரை வரவேற்றான். வறுமை அவரை ஆட்டிப் படைத்தது. அன்றாட வாழ்க்கையை நடத்துவது கூட முடியாது போயிற்று. அவரை ஆதரித்த 'அன்பர்கள்' எல்லோரும் கைவிட்டு விட்டனர். நாட்டின் விடுதலைக்காக ஒரு பெரிய அரசாங்கத்தோடு போராடிய சிதம்பரனார், கடைசியாக வறுமையோடு போராடி அதில் வெற்றிபெற முடியாமல் 1936-ல் உயிர் நீத்தார்.

எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று அவர் அன்று நினைத்துப் பாடுபட்டாரோ, அந்தக் காரியம் இன்று வெற்றி பெற்றுவிட்டது. 43 ஆண்டுகளுக்கு முன் ஓட்ட வேண்டுமென்று அவர் நினைத்த கப்பல் இன்று ஓடுகிறது. இது அவருடைய கனவை நினைவாக்கும் ஒரு நற்செய்தியாகும்—தமிழ் மக்களுக்கு அவர் உண்டாக்கித் தந்த ஒரு பெருமையாகும். பண்டைக்காலத்தில் கப்பலோட்டிப் புகழ்பெற்ற தமிழர்களின் சிறந்த பண்பை, 'வ. உ. சிதம்பரம்' என்ற கப்பல் நிலைநாட்டிவிட்டது.

வீரர் சிதம்பரனாரின் கனவை நினைவாக்கிவிட்டோம் என்ற மகிழ்ச்சி ஒவ்வொரு தமிழனுக்கும் உண்டாகும் இந்தச் சமயத்தில், சிதம்பரனார் பெயரால் கடலில் கப்பல் ஓடுகிறது—ஆனால் அவருடைய குடும்பமாகிய கப்பல் கரை காண முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறதென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. சிதம்பரனாரின் துணைவியார் குடியிருப்பதற்குக்கூட வீடின்றித் துயரக் கடலில் மிதந்து கொண்டிருக்கிறார். இது மிக மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும் என்பதை நாம் வலியுறுத்துவதோடு, இதுபற்றி 'லோகோபகாரி' ஆசிரியர் தோழர் ப. சு. நெல்லையப்பர் அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளையும் இங்கு வெளியிடுகிறோம்:—

"தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்குச் செல்லும் 'வ. உ. சிதம்பரம்' என்ற கப்பலின் முதல் யாத்திரை, சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் கனம் பொருந்திய ராஜாஜி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது சரித்திரத்தில் இடம்பெற வேண்டிய விஷயமாகும். தமிழ் மக்கள் இதுபற்றி மகிழ்ச்சியடையவேண்டும். சிதம்பரனார் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கி நடத்தியபொழுது அவருடன் தொண்டு செய்யும் பாக்கியம் பெற்ற என் போன்றவர்களுக்கு இந்த நிகழ்ச்சி மட்டற்ற மகிழ்ச்சி அளிப்பதாகும்.

காலஞ்சென்ற சிதம்பரனார் பரதேசிக் கப்பல் கம்பெனியுடன் போராடி, சுதேசி கப்பற் கம்பெனியைத் தொடங்கினார். அது காரணமாக எண்ணிறந்த இன்னல்களை அடைந்து, சிறைவாசமும் செய்தார். அவர் கனவு நனவாவது பற்றி அவர் ஆன்மா இன்று சாந்தி பெறும். அவரது சுதேசிக் கப்பல் முயற்சிக்கு அந்நாளில் இடையூறு விளைத்த பரதேசிக் கப்பல் கம்பெனி இன்று தூத்துக்குடியை விட்டு மறைந்துவிட்டதும், அதற்குப் பதில் ஒரு சுதேசிக் கப்பல் கம்பெனி தோன்றியிருப்பதும் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகளாகும்.

சிதம்பரனார் பேரால் ஒரு கப்பல் ஓடுவது போதாது, அவர் பேரால் நூற்றுக் கணக்கான வர்த்தகக் கப்பல்களும், பிரயாணிக் கப்பல்களும் நமது நெடுங்கடல்களில் ஓட வேண்டும்.

மேலும் சிதம்பரனார் நினைவைப் போற்றுமாறு அவர் பேரால் கப்பல் விடும் நமது நாட்டார் அவர் குடும்பத்தைப் போதிய அளவு கவனியாதிருப்பது அறமில்லை. அவரது மனைவி மக்கள் வாழ்ந்திருப்பதற்கு அவர்களுக்கென்று ஒரு வீடு கூட இல்லை. இன்னும் முற்றுப் பெறுமலிருக்கிற சிதம்பரனார் நிதியிலிருந்து அவர் மனைவியாருக்கு மாதம் முப்பது ரூபாய் கொடுத்து வருவதே நாட்டு மக்கள் அவர் குடும்பத்தாரிடம் காட்டும் நன்றியாக இருக்கிறது. சிதம்பரனார் நிதியிலிருந்து அவர் குடும்பத்தாருக்குத் தாராளமாக உதவி செய்ய வேண்டுமென்பது எனது வேண்டுகோள்.

சிதம்பரனாரின் மூத்த புதல்வர் வ. உ. சி ஆறுமுகம் சென்ற சுமார் இருபதாண்டுகளாக அரசாங்க சேவையில் இருந்துவருகிறார். இரண்டாவது புதல்வர் வ. உ. சி. சுப்பிரமணியம் சென்ற மூன்று ஆண்டுகளாகத் தினமணி பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேவை செய்து வருகிறார். கடைசிப் புதல்வர் வ. உ. சி. வாலிசுரன் ராமநாதபுரம் ஜில்லாவில் அரசாங்க ஊழியம் செய்து வருகிறார். இவர்களில் ஒருவரும் அதிக வருவாயுள்ள பெரிய உத்தியோகங்களில் இல்லை. எனவே தேச முழுமையும் சிதம்பரனாரைப் பற்றிச் சிந்திக்கின்ற இந்நாளில் அவரது குடும்ப நிலையைப்பற்றி நினைவூட்ட வேண்டியது எனது கடமை

(C-பக்கம் பார்க்க)

# ★ எழுச்சியுற்ற ஆசியா! ★

—✲—

### இரு சுதந்திர அரசுகள்



இந்தியாவும்— பாக்கிஸ்தானும் அரசியல் விடுதலைபெற்றுவிட்டன. விலங்கு அறுந்தது, ஒருவருக்கொருவர் போரிடுவதற்கல்ல என்னும் விவேகம் இருநாட்டை ஆளுவோரிடமும் காணோம். பகையைப்பெருக்குவதற்குள்ள பேச்சும், படைப்பெருக்கமும் முதலிடம்பெற்றிருக்கிறது. முன் அறிவிப்பில்லாமலே, காஷ்மீரை போர்க்களமாக்கிக்கொண்டன இரு அரசுகளும். பதினைந்து மாதங்களுக்குப் பின்னராவது நல்லறிவு பிறந்தது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். தினம் ஒன்றுக்கு இந்திய அரசுக்கு மட்டும் இருபத்துநாலரை இலட்சம் செலவாகிக்கொண்டிருந்தது.

ஏட்டிலே இன்பபுரி தெரிகிறது; நாட்டிலே நாசநிலை இருக்கிறது. நாடாளுவோர் நாவிலே மக்கள் இருக்கிறார்கள்; உள்ளத்திலே முதலாளிகள் குடிகொண்டு இருக்கிறார்கள். முன்னாள் கூறினதை வெறும் சொல்லென்று மதித்துவிட்டு, இதுவரை கூறாத கோணல் பாதையில் நாட்டை இட்டுச் செல்லுகிறார்கள். இன்று இவர்கள் பேசும் பேச்சு முன்னிலும் கவர்ச்சி உடையதாக இருந்தாலும், கனிவுடையதாக இருந்தாலும், எவ்வாறு நாம் நம்பிக்கை கொள்வது முடியுமோ?

அதிகாரத்தால் ஒற்றுமையை அமைத்துவிடலாம் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு உருவாக்கப்படும் ஒற்றுமை, சோதனைக்கு உள்ளாகும் வேளையில் மணல்மேடு சரிவதுபோல் சரிந்துவிடுமே என்ற நினைப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தப் பதினாறு திங்களில், நூறு கோடி ரூபாயை, மக்களிடமிருந்து, தகாத முறையில் தட்டிப் பறித்துக் கொண்டுள்ளார்கள் இந்திய முதலாளிகள் என்று பண்டிதரே ஆத்திரத்தோடு கூறுகிறார் கூறுகிறார் என்றால், தனது ஆட்சியின் திறமையின்மைக்கு, பிரதமரே அளிக்கும் நற்சாட்சிப் பத்திரம் என்பதே அதன் பொருளாகும். முதலாளிகள் கொழுக்கின்றனர். தொழிலாளர்கள் தவிக்கின்றனர் நடுத்தர வாழ்வினர் தத்தளிக்கின்றனர். விடுதலை வீரர்களின் ஆட்சி இந்த நிலையில் இருக்கிறது. இரண்டு நாட்டிலும் இந்நிலைதான். மக்கள் ஏமாற்றம் பெற்றுள்ளனர்.

வல்லரசுகளில் ஒன்றென மதிக்கப்பட்ட சீனா, பொதுவுடைமை நாடாக முழுதும் மாறுவதற்கு இன்னும் சில நாளே இருக்கிறது. முதல்தரமான முதலாளித்வ நாடல்ல சீனா. முதிர்ந்து விட்ட நிலையையும் அங்கு முதலாளித்வம் பெற்றிருக்கவில்லை. பெரிய விவசாய நாடு. நிலப்பரப்பும் பெரிது. மக்கள் தொகையும் கூடுதல். நமது நாட்டிலுள்ள வாழ்க்கைத் தரத்திலும், அங்கு வாழ்க்கைத்தரம் மோசம். வேலையற்றோர் தொகையும் ஏராளம். ஏழு ஆண்டுகளாக ஜப்பான் படையெடுப்பினால் சீரழிந்து கிடக்கிறது. உள்நாட்டுக் குழப்பத்தாலும் சீர்குலைவு அதிகம். பொதுவுடைமை ரீதியில், சீனாவைத் திருத்தி அமைப்பதற்கு இன்னும் சில ஆண்டுகள் செல்லும் என்று கூறுவது மிகையாகாது. சீனாவிலே தோன்றியுள்ள சிகப்பு, அதனைச் சுற்றியுள்ள நாடுகளில் நடைபெறும் முன்னேற்ற இயக்கங்களை உற்சாகப்படுத்தி, மக்களுக்கு விடுதலையைத் தேடித்தரப் பெரிதும் உதவி புரியும். இந்நிலையில், சீனாவை ஆட்டிப்படைத்து வந்த அமெரிக்க ஏகாதிபத்தியம், சோவியத் நாட்டிற்கு எதிராகத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, சென்ற போரில் சிதறிக் கிடக்கும் ஜப்பானின் போர்த்தொழிலைச் செப்பனிட முற்படுவது நிச்சயம். இதனை எண்ணுகிற பொழுது ஆசியாவின் எதிர்காலம் மிகமிகப் பயங்கரம் நிரம்பியதாகவே காட்சி அளிக்கிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் முன்யோசனையோடு நடந்து கொண்டதைக் கண்டிருந்தும், ஐரோப்பாவிலுள்ள குட்டி ஏகாதிபத்தியங்களுக்கு, பழைய சுரண்டல் மோகம் இன்னும் விட்டுவிடவில்லை. பிரான்சும், டச்சும், சுரண்டல் பணியில் போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தோனேஷ்யாவில், டச்சு ஏகாதிபத்தியம், முன்னாள் செய்துகொண்ட ஒப்பந்தத்தையும் மறந்து, இந்தோனேஷ்ய குடியரசைக் குலைக்கவும், அதன் தலைவர்களைப் பிறர் அறியா இடத்தில் பாதுகாப்பில் வைக்கவும், ஆயுதம் தாங்காத சாதாரண மக்கள்மீது குண்டு வீசிக் கொடுமை செய்வதுமான காரியத்தில் முனைந்திருக்கிறது. இந்தோனேஷ்யாவில் பாத்யதை கொண்டச் டச்சு ஏகாதிபத்யத்திற்கு எந்தவித உரிமையும் கிடையாது. ஜப்பான் படைஎடுப்பின்போது, இரண்டொரு நாளில் இந்தோனேஷ்யாவை விட்டு விட்டு, தப்பினால் போதுமென்று ஓடிவிட்ட உளுத்துப்போன ஏகாதிபத்யமாகும் அது. இந்தோனேஷ்யா விடுதலை பெற்றதும், டச்சு ஏகாதிபத்யத்தின் இராணுவபலத்தால் அல்ல. அமெரிக்க — ஆங்கிலேய இராணுவம் தான், அந்த நாட்டை ஜப்பான் பிடியிலிருந்து விடுவித்தது. எனவே, இந்தோனேஷ்யாவின் அரசியல் விடுதலையைக் கண்ணியப்படுத்தி, நல்லதோர் சுயாட்சி அமைத்து, அந்த நாட்டுக்கு நலம்பல தேடவேண்டிய பொறுப்பிலுள்ள நாடுகள் இங்கிலாந்தும்— அமெரிக்காவும் ஆகும். ஆனால், இத்துறையில் இருநாடுகளும் நேர்மையைத் துறந்துவிட்டிருக்கின்றன. டச்சு ஏகாதிபத்யத்திற்குச் சலுகைக்காட்டி வருகின்றன. ஐக்கியநாடுசபையில், இந்தோனேஷ்ய விவகாரமாக, இருநாடுகளும் காட்டிவரும் மனோபாவம், டச்சு ஏகாதிபத்யத்திற்கு ஆக்கம் தருவதாக இருக்கிறதே அன்றி, பரிந்து நடந்துகொள்ள வேண்டிய பரிபக்குவத்தை காட்டுவதாக இல்லை.

ஏற்கெனவேதான் ஆசியநாடுகளில் பல, ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் பிடிகளில் சிக்கி, சுயேச்சையாக நடந்துகொள்ளும் ஆற்றல் அற்றுக்கிடந்தன. இந்தப் போருக்குப் பின்னர்தான் அந்த அடிமை நிலை தொலைந்து புதியநிலை பிறந்து இருக்கிறது. அரசியல் பிடிதளர்ந்த பின்னரும், அடிமைச் சங்கிலி

அறுந்து விழுந்த பின்னரும் மனதில் பட்டதை வெளியில் கூறாமல், முடியுமானால் சமாதான முறையிலேயே பொருளாதார தடுப்பு முறைகளை மேற்கொள்ளாமலும் இருக்குமா? டச்சு ஏகாதிபத்தியம் இந்தோநேஷ்யாவில் நடந்துகொள்ளும் வெறியாட்டத்தைக் கண்டு ஆசிய நாடுகள் ஆவேசம் கொண்டு எழுந்தன. டில்லியில் சென்ற திங்கள் இறுதியில் இந்திய பிரதமர் பண்டித ஜவஹரின் தலைமையில் ஒன்று திரண்டன. டச்சு ஏகாதிபத்தியத்திற்கு முடிந்த எச்சரிக்கையும் விடுத்துள்ளன. எச்சரிக்கையை மதித்து நடக்க டச்சு முன்வரவில்லையானால், வெள்ளையர்கள் மீது—அவர்கள் எந்த நாட்டினர் ஆயினும்—ஆசியர்கள் சொந்த அனுபவத்தால் பெற்றுள்ள அவநம்பிக்கை பெறுவதற்கு இடமேற்படுமே யன்றி, நம்பிக்கையும் நல்லுறவும் வளருவதற்கு இடமேற்படாது.

ஐக்கிய நாட்டுச் சபையின் முக்கியத்துவத்தைக் குறைக்கவோ, அதற்குப் போட்டியாக ஆசியாவிற்கு என்று ஒரு புதிய ஸ்தாபனத்தைத் தோற்றுவிக்கவோ, டில்லி மாநாடு கூடவில்லை என்று இந்திய பிரதமர் விளக்கியுள்ளார். வெள்ளையர்கள் போக்கிலே நாணயமில்லாததால், முன்னாள் ஆசியர்கள்மீது அவர்கள் கொண்டிருந்த அகம்பாவம் இன்னும் முழுதும் மாறாததால், ஆசிய சுதந்திர எழுச்சியின் ஒருகூறாக இருக்கும் இந்தோநேஷ்யாவின் விவகாரத்தில், அமெரிக்காவும் — இங்கிலாந்தும் நேர்வழியைக் கைக்கொள்ளத் தயங்குகின்றன என்று ஆசியமக்கள் உண்மையாகக் கருதுகிறார்கள். இதன்விளைவுதான் ஆசிய மாநாடு. மேலும் விபரீதம் நேராமுன்னர் இங்கிலாந்தும் அமெரிக்காவும் தக்க முறையில்நடந்துகொள்ளவேண்டும். அதாவது, டச்சு ஏகாதிபத்தியத்தின் அடங்காப்பிடாரித்தனத்தை அடக்கி, இந்தோநேஷ்ய குடியரசை நிலைபெறச் செய்து, ஆசியமக்களின் அன்பையும் ஆதரவையும் பெற வேண்டும், வெள்ளை அரசுகள். அவர்களுடைய நல்லெண்ணத்திற்கு, இந்தோநேஷ்யா ஒரு உரைகல். அணுகுண்டும், அதனைச் சுமந்து சென்று வீசும் விமானமும், அதனை இயக்க ஆற்றல்மிக்கோரும், வெள்ளை அரசுகளிடம் ஏராளமாக உண்டு என்பதை அனைவரும் அறிவர். மக்களைக்கொல்ல அவைகள் தேவைப்படலாம். ஆனால், மக்களின் பற்றுதலையும் பாசத்தையும் கொல்லும் சக்தி அவைகளுக்குக் கிடையாது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். சிகப்பாகும் சீனாவையும் பார்த்துப் புத்தியோடு நடந்து கொள்ள வேண்டும் ஏகாதிபத்திய அரசுகள்!


## நேபாளம்



சர்வசாதாரணமாக வெற்றி பெற முடியாத, இயற்கை அமைப்புடன், சுதந்திர நாடாக விளங்கி வருகிறது நேபாளம். இந்தியாவிற்கு ஆபத்தை உண்டாக்கும் ஆற்றல் அதற்கு உண்டு. அரசன், கொடுங்கோலின் சின்னமாக இன்றும் இருந்து வருகிறான். பொறுப்பாட்சிக் கிளர்ச்சி இன்று அங்கு நடந்துகொண்டு இருக்கிறது. அதனை மதிக்காது மன்னன், மக்களைக் கொல்லப் படையை ஏவுகிறான்.

பிரிட்டனின் ஆதிக்கம் அங்கு இருப்பதாகத் தெரிகிறது. சோவியத்தைக் காட்டியே, நேபாளத்தில் ஆதிக்கம் பெற்றிருக்கின்றனர் ஆங்கிலேயர். வரவிருக்கும் ஆபத்தின் அறிகுறி இது. முளையிலேயே கிள்ளி எறியவேண்டியது முக்கியம்.

## மலாயா



பிரிட்டிஷ் பிடி இன்னும் தளர்ந்துவிடவில்லை அங்கு. உள்நாட்டில் தொழில் அற்ற தமிழர்களும், சீனர்களும் அங்கு ஏராளமாகத் தொழில் தேடிச் சென்றுள்ளனர். இரப்பரும், டின்னும் அங்கு முக்கியத் தொழில்கள். பிரிட்டிஷ் முதல் போட்டு இருக்கிறது. தொழிலாளர்கள் விழிப்படைந்திருக்கிறார்கள். சிதறிக் கிடக்கவில்லை. கட்டுப்பாடாக ஸ்தாபன ரீதியில் அமைந்திருக்கிறார்கள். தொழிலாளர்களின வருவாய் வரவரக் குறைந்துகொண்டு வருகிறது. எனவே தொழிலாளர்களின் துன்பமும் பெருகிக்கொண்டு வருகிறது. கிளர்ச்சி வலுக்கிறது. பொதுவுடைமைப் பூச்சாண்டியைக் கிளப்பிவிட்டு, பசித்தவரைப் பொசுக்கித் தள்ளும் பெரும்பணியில் பிரிட்டிஷ் இராணுவம் ஈடுபட்டுள்ளது. இராணுவ நடவடிக்கை அதிகரிக்க அதிகரிக்க, மக்களின் விடுதலைக் கிளர்ச்சியும் வலுவடைந்தவண்ணம் இருக்கிறது. விடுதலை, விரும்பினதற்காகக் கிடைத்துவிடக்கூடிய நிலையில்லை என்பதை மெய்ப்பிக்கிறது மலாயா.

## பர்மா



சுதந்திரம் கிடைத்த சில நாளைக்கெல்லாம், பதவிப்பித்தம் தலைக்கேறிய சிலரால், அமைச்சர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். உள்நாட்டுக் குழப்பம் தணிந்தபாடில்லை. போலீசும் இராணுவமுங்கூட கட்சிப் பிரதிக் கட்சியாகப் பிரிந்து கலகம் விளைவிக்கின்றன. தனிநாடு கேட்கும் சமூகத்தினரும் தம் கோரிக்கையை வற்புறுத்துகின்றனர். வெண்கொடி — செங்கொடி கம்யூனிஸ்டுகள் என்ற விசித்திரத்தையும் அங்கு பார்க்கலாம். நாடெங்கும் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. நெல் வயல்கள் பயிரற்ற பாழடைந்த நிலங்களாக விடப்பட்டிருக்கின்றன. மக்களாட்சிப் பயிர் முளைப்பதற்குத் தகுதி உடைய நிலமாக, பர்மாவைப் பண்படுத்துவதற்கும் பக்குவமாக வளர்ப்பதற்கும் பல காலம் பிடிக்குமென்றே தெரிகிறது. நல்லாட்சி அமைப்பதற்கு ஆசை மட்டும் போதாது, அதற்கான அனுபவமும் அறிவும் ஆற்றலும் அடிப்படைத் தேவைகள் என்பதையே பர்மா போதிக்கிறது.

ஆசியாவில் உண்டாகும் கிளர்ச்சிக்கெல்லாம் சோவியத் இரஷ்யாதான் மூல காரணம் என்று பேசும் பிரகஸ்பதிகளும் இல்லாமல் இல்லை. பணம் கொடுத்தும், வேறு பல முறைகளைக் கையாண்டும், அமைந்துள்ள அரசை அழித்துவிட வேண்டுமென்று தூண்டிவிடுவது இரஷ்யாதான் என்று ஆதிக்கக்காரர்களும் பேசுகிறார்கள். பசி, பஞ்சம், கல்வியின்மை, வேலையின்மை, பிணி, போன்ற வசதிக் குறைவுகளால், வேறு முறையைத் தேட மக்கள் முயற்சி தேடுவது இயற்கையேயாகும். பொதுவுடைமையே அதற்கான மருந்தாகத் தெரியுமானால் மக்கள் அதனைத் தேடவும், பலரைப் பலியிட்டேனும் பெறவும், பரபரப்புக் காட்டுவதிலே, பிறர் தூண்டுதல் இருக்கவேண்டிய அவசியமில்லையே. நிலையை நேர்செய்ய

விரும்பாத ஆதிக்கக்காரர்கள், மக்கள் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காகவும், அதற்கான அடக்குமுறைகளை வெகு இலகுவாக மேற்கொள்வதற்காகவும், கிளப்பிவிடப்படும் பூச்சாண்டியே அது. பசியைத் தணிக்க வழிசெய்வதில்தான் கம்யூனிசப் பரவலைத் தடுக்கும் முறை இருக்கிறதேயன்றி, புதிய புதிய போர்க் கருவிகளுக்கு அந்தச் சக்தி இல்லை என்பதை என்றுதான் ஆதிக்கக்காரர்கள் அறியப் போகிறார்களோ?

## சிலோன்



சிறிய தீவிற்குச் சுதந்திரம் கிடைத்ததும், அதன் பார்வையிலே புதியபோக்கும், பேச்சிலே கம்பீரமும் நர்த்தனம் புரிகின்றன. பெரிய நாடானாலும், அதட்டிப் பேசும் அளவிற்கு ஆற்றல் பெற்றிருக்கிறது. அச்சத்தை அகற்றிவிட்டது, சொந்த வீட்டை வெளியாரின் குறுக்கீடின்றி நேர் செய்வதில் முனைந்திருக்கிறது. சிலர் அதனைக் கண்டு முணுமுணுப்பதும், வேறு சிலர் சீறுவதும், சொந்த இலாபத்துக்கேயன்றி சிலோனுக்குச் சுகந்தேடித் தருவதற்காக அல்லவே அல்ல. சுதந்திரச் சிலோனில் இன்று அதிகமாக அவதிக்குள்ளாகி இருப்போர், நமது தமிழர்கள்தான். தாய் நாடு, பிறரின் வேட்டைக்காடாக இருப்பதால், அவர்களை வரவேற்கும் நிலையில் இல்லை. திராவிடம் தனியானாலன்றி, கடல் கடந்த தமிழர்களுக்கும் சரி, உள்நாட்டு மக்களுக்கும் சரி, வேண்டியதைத் தேடித் தரும் ஆற்றல் ஏற்படப்போவதில்லை

✻

## அங்கே அப்படி! இங்கே இப்படி!

★

மேல்நாடுகள் பலவற்றில், மழை பெய்வதற்காக மனித அறிவு பயன்படுத்தப்பட்டு, விஞ்ஞானக் கருவிகள் மூலம், வேண்டும் போது மழையை வருவிக்கவும், வேண்டாத போது நிறுத்தவும், எவ்வளவு மழை தேவையோ அந்த அளவுடன் மழை பெய்வதை நிறுத்திக் கொள்ளவுமான முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இங்கே, மழைபெய்வதற்காக மகேஸ்வரன் ஆலயங்களில் பூஜையும் பிரார்த்தனையும் செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இந்துமத தர்ம பரிபாலன போர்ட்டாரால் 7—2—49-ல் வெளியிடப்பட்ட ஒரு சுற்றறிக்கையில்,

"கடவுள் கிருபையால் மழை பெய்யும் வரையில் பூஜை நடைபெறவேண்டும்"

என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். மழைபெய்யாமல் போனதற்குக் காரணம், கடவுளின் கோபம் தான்—ஆகையால் அவருக்கு விசேஷ பூஜைகள் செய்தால் அவருடைய கோபந்தணிந்து மழையைப் பொழிய வைப்பார் என்பது மதபரிபாலனரின் கருத்தாகத் தெரிகிறது. அப்படியானால், கடவுளுக்குக் கோபம் உண்டானதற்கும், அது காரணமாக அவர் மழை பெய்வதைத் தடுத்ததற்கும் உள்ள காரணம் என்னவாய் இருக்கலாம் என்பதை நமது மதபரிபாலகர்கள் ஏன் சிந்தித்துப்பார்க்கவில்லை?

அங்கே, மழைபெய்வதற்கு மனித அறிவு பயன்படுத்தப்படுகிறது. இங்கே, மழைபெய்வதற்கு மகேஸ்வரனுடைய கிருபை தேவைப்படுகிறது! அங்கே அப்படி! இங்கே இப்படி!

✻

## தானாக இயங்கும் அச்சுப்பொறிகள்

தரத்திற்கும் திறமைக்கும் உலகப் புகழ் பெற்றுள்ள பிரிட்டிஷ் ஸ்தாபனமொன்று புதவித அச்சிடும் இயந்திரங்களைத் தயாரித்து வருகின்றது. மிக வேகமாக, தானாக இயங்கும் சிலிண்டர் பிரஸ் ஒன்று வரும் மேமாதம் நடைபெறவிருக்கும் பிரிட்டிஷ் கைத்தொழில் காட்சியில் காட்டப்படவிருக்கிறது. இதைத் தவிர அச்சுக்கூடங்களுக்கான பலவித நூதன சாதனங்களும் காட்சியில் இடம் பெறுமென அறிவிக்கப்படுகிறது. இயந்திரத்தின்மூலம் அராபிய மொழியில் அச்சுக் கோர்ப்பதற்கான ஒரு முறையும் தத்ரூபமாகக் காட்டப்படும். இம்முறை, கைகளால் அச்சுக் கோர்ப்பதை விட மிகச் சிக்கலானது. இவைகளைத் தவிர பத்திரிகைகளில் படங்கள் அச்சிடுவது சம்பந்தமாகவும் புது இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. போட்டோவிலிருந்து பிளாக்கு தயார்செய்து அச்சிடுவதற்குப் பதிலாக நேராகவே படத்தின் "நெகட்டிவவை" உபயோகிக்கமுடியும் என்று கூறப்படுகிறது.

—

## ஒன்றல்ல, பல!

—

ஐக்கிய மாகாணத்திலுள்ள காங்கிரஸ்காரர்கள் ஐநூறு பேர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று புகார் செய்யப்பட்டதன் பேரில், நூறு காங்கிரஸ்காரர்கள் ஒழுங்குதவறி நடந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, அவர்களுக்கு ஆறு மாதம் முதல் இரண்டு ஆண்டுவரை காங்கிரசில் இருக்கக்கூடாதென்று தீர்ப்பளிக்கப்பட்டது. காங்கிரஸ் கணக்கில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதாகவும், இன்னும் பல ஒழுங்கீனங்களைச் செய்ததாகவும் அவர்கள்மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

✻

சொற்ப காப்பிகளே உள்ளன!

சி. என். ஏ. எழுதிய

**'வாழ்க்கைப் புயல்'**

விலை 0—12—0.

பதின்மூன்றணா அனுப்பினால் தபால்மூலம் அனுப்பப்படும்.

*

எதிர்பாருங்கள்!

சி. என். ஏ. எழுதிய

**"கம்பரசம்"**

(2-ம் பாகம்)

கைவல்யம் அவர்கள் எழுதிய

**"இராம இராச்சியம்"**

விபரங்களுக்கு:—

**பரிமளம் பதிப்பகம்**

காஞ்சிபுரம்




**25--2--49-ல், திரைக்கு வருகிறது.**

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.